# இருதய வியாதிக்களுக்கு ஈரவெங்காயம் ஓர் அருமருந்து


Register d as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49 மலர் 11

போன்: 389 National Tamil Daily இத: 41

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 10 முஹறம் 4 ஞாயிற்றுக்கிழமை [23-3-69







## பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

லண்டன், மார்ச் 22

மனிதனைப் பிடித்து வரும் இருதய நேய்களுக்கு சாதாரண வெங்காயம் ஒரு அருமருந்தாக விளங்கக் கூடுமென பிரிட்டிஷ் வைத்திய விஞ்ஞானிகள் குழு ஒன்று நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பொரித்தஅல்லது சூடாக்கிய வெங்காயம், உறைந்த அன்றிக் கட்டிபட்ட இரத்தத்தை கரைத்துவிடும் அபாரசக்தி படைத்ததாக விளங்குகிறது. இருதய நாளங்களில் இரத்தம் உறைந்து ஏற்படும் கோரமான மாரடைப்பு வியாதிகளை போக்கடிக்கும் அதிசய ஆற்றல் வெங்காயத்திற்கு உண்டு என்பதாக இவர்களது கண்பிடிப்பு

வெங்காயத்தின் ரசாயன சேர்மங்களை ஆராய்ந்து, சக்திவாய்ந்த ஒரு மருந்தை உருவாக்குவதற்கு இந்த ஆராய்ச்சி பயன்படலாமெனவும், இருதய வியாதிக்கு அது ஒரு வரப்பிரசாதமாக விளங்கலாமெனவும் இந்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

நியூகாஸின் சர்வகலாசாலையின் வைத்தியப் போதனபீட டாக்டர்களே இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுவருகிறார்கள் பிரான்ஸில் குதிரைகளுக்கு ஏற்படும் குருதி அடைப்பை நீக்குவதற்கு வெங்காயமும், வெள்ளைப் பூடும் கொடுக்கப்படுகிறது என்பதைக் கேள்வியுற்ற இந்தவைத்தியர்கள் மனித உடற்கூற்றில் வெங்காயம் எப்படி செயல் படுகிறது என்பதனை ஆராய்ந்தறிய முற்பட்டார்கள்.

உடற்கூற்றிவ் உண்டாகும் ''பிப்ரின்'' எனப்படும் ரசானயவஸ்துவே இரத்தத்தை உறையச் செய்துவிடுகிறது. இத்த பிப்பினைகரைத்துவிடும் ஆற்றல் இரத்தத்திற்கு உண்டு. ஆயினும் பொரித்த, கொழுப்புச் சத்துள்ள உணவுகள் இரத்தத்தின் இந்தஆற்றலை தணித்துவிடுகின்றன.

ஆராய்ச்சியாளர்கள் வெங்காயத்தின் ஆற்றலை அறிவதற்குமுதலில் 22 ஆஸ்பத்திரி நோயாளிகளுக்கு கொழுப்புச் சத்துள்ள உணவைக் கொடுத்துப்பார்த்தனர். இரண்டுஅல்லதுமூன்று மணி நேரத்தின் பின்னர் இந்த நோயாளிகளின் இரத்த உறைவை தடுக்கும் இயற்கை ஆற்றல் குறைந்து காணப்பட்டது. மறுநாள் பொரித்ததும் சூடாக்கியதுமானவெங்காயம் அவர்களுக்கு காலை உணவுடன் கொடுக்கப் பட்டது. இரண்டு மணிநேரத்தி பின்பு இவர்களின் இரத்தநிலை பரிசோதிக்கப் பட்டபோது ஒரு ஆச்சரியமாக தகவல் தெரியவந்தது. அதாவது இந்த நோயாளிகளின் இரத்தத்தில்குருதியுறைவதைத் தடுக்கும் ஒரு புதிய சக்தி உண்டாகியிருப்பதை டாக்டர்கள் காணக் கூடியதாக இருந்தது.

வெங்காயத்திற்கு இந்த அபார சக்திஇருப்பதுதான் காரணம் என்னவென்பது மர்மமாகவே இருக்கிறது. இதனை ஆராய்ந்தறிவதில் இந்த வைத்திய விஞ்ஞானிகள் கோஷ்டி மட்டுமன்றி பிரிட்டனிலுள்ள பிரபல மருந்தாக்க நிறுவனங்களும் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன.

## ஆவரங்கால் கொலைவழக்கு எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆவரங்கால் கொலைவழக்கில் எதிரி விடுதலைசெய்யப்பட்டார். விசாரணை நடுவில் விசாரணையைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லையென ஜூரி சபையினர் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் ஆவரங்காலில் 68ம் ஆண்டு ஜூன் மாதம் 3ந் தேதி முருகன் தம்பிராசா என்பவர் பரமநாதன் லிங்ககுமாரைக் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

## இலங்கையிலிருந்து

# இந்தியா திரும்புவோருக்கு பாரத அரசாங்கம் புனர்வாழ்வு

## ரூபா 1கோடி 20லட்சம் ஒதுக்கீடு

புதுடில்லி, மார்ச் 22

இலங்கையிலிருந்து இந்தியா திரும்புவோருக்கு மறு வாழ்வு அளிக்கப் பாரத மத்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கென ஒரு கோடி இருபது லட்சம் ரூபாவைப் பாரத அரசாங்கம் செலவு செய்யும். இம்முடிவு இன்று தெரிவிக்கப்பட்டது.

நாடு திரும்பும் இந்திய வம்சாவளியினருக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கெனப் பாரத அரசாங்கம் நடப்பு வருட நிதியாண்டில் இத்தொகையை ஒதுக்கியுள்ளது தமிழ்நாட்டில் குடியேறும் இந்திய வம்சாவளியினருக்கும் இத்தொகையின் ஒரு பகுதியை அரசாங்கம் செலவுசெய்யும்.

1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30-ம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் இந்தியப் பிரஜைகளாக 35,128 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என இலங்கை அரசாங்கத்தின் கையை விட்டு இந்தியா சென்றுள்ளவர்கள் தொகை 21,155 பேர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தின்படி 15 வருடத்துக்குள் ஐந்தேகால் லட்சம் பேர் இந்தியா திரும்ப வேண்டும்.



## பொலிஸ் இன்ஸ்பெக்டரை ஏமாற்றமுயன்றவர் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

தன்னை ஒருஇரகசியபொலிசார் எனத் தெரிவித்து பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஒருவரையே ஏமாற்ற எத்தனித்த வர்த்தகர் ஒருவரின் 'குட்டு' அடுத்த சிலமணி நேரங்களுக்கிடையேயே அம்பலமாகியதாம். இதனைத் தொடர்ந்து இவர் கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம் பொலிஸ்பகுதியிலுள்ள மருதனுமடம்சந்தியில் நடைபெற்ற இச்சம்பவம் வடபகுதிபொலிசாரை உஷார் படுத்தியுள்ளது.

சுன்னாகம் பொலிஸ்இன்ஸ்பெக்டரான திரு. ஜேக்கப்பிடம்தன்னை ஒரு இரகசியப் பொலிஸ் எனக்கூறி, தான் வெள்ளவத்தை பொலிசில் கடமையாற்றுவதாகக்கூறியதாகத் தெரிவிக்கப்பட்ட கொழும்பைச்சேர்ந்த வர்த்தகரான எட்வர்ட் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

பொலிஸ் விசாரணையின் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட இவருக்கு எதிராகப் பொலிசார் வழக்குத்தாக்கல்செய்யவிருக்கின்றனர்.

நாகரிக உடையில்கிராமப்புறங்களுக்கு வந்து தம்மை இரகசியப் பொலிஸார் எனக்கூறும் பேர்வழிகளை நம்ப வேண்டாமென பொதுமக்களுக்கு பொலிசார் வேண்டுகோள் விடுத்திருப்பதோடு தாமும் பலத்த கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். (கா. நி.)

## நாரந்தனை கிராமசபைக்கு

## 'ஓரேசங்கத்தின் மேற்பார்வையில் கூப்பன் கடைகள் வர வேண்டும்'

### கூட்டுறவு கமிஷன் முன் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் நகரிலுள்ள சகல கூப்பன் கடைகளையும் ஒன்றாக இணைத்து ஒரு பெரிய சங்கத்தின் மேற்பார்வையில் கிளைச் சங்கங்களாக அமைக்க வேண்டுமென்ற சிபார்சை கூட்டுறவு விசாரணைக்கமிஷன் முன்னிலையில் நேற்று சாட்சியமளித்த சுண்டுக்குளி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத் தலைவரான திரு. கு. நேசையா தெரிவித்தார்.

கூட்டுறவு விசாரணைக் கமிஷன் நேற்றுக்காலை முதல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அங்கத்தவர்களின் சாட்சியங்களை ... கூட்டுறவு பேரங்காடியும் யாழ். நகரில் நிறுவ வேண்டுமென திரு நேசையா வலியுறுத்தினார்.

இதுபற்றி சகல கிளைச் சங்கங்களிடமும் அபிப்பிராயம் கேட்கப்பட்டதாவென கமிஷன் தலைவர் கேட்டபோது 40 இணைச்சங்கங்களும் ஒரு நாள்முழுவதும் கருத்தரங்குமுறையில் ஆராய்ந்த பின்னரே இந்த ஆலோசனை மகஜரில் சேர்க்கப்பட்டதெனை யாழ்ப்பாணம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தலைவரான திரு. ஏ. ஜேஇராஜதுரைசிங்கம் தெரிவித்தார்.

தனியான ஒரு சங்கம் பண்டகசாலைகளை நடாத்தும் ... கேட்டபோது யாழ்ப்பாணப் பட்டின கூட்டுறவுப் பண்டகசாலைத் தலைவரான திரு ஏ. ஈ. தம்பர் தெரிவித்ததாவது:-

சில வருடங்களுக்கு முன்னர் எங்கள் சங்க மனேஜரும், காரிய தரிசியும் சென்னைப்பட்டணம் சென்று திருவல்லிகேணி சங்கம்நடககும் முறையை ஆராய்ந்தபோது அது உண்மையான முறையில் கூட்டுறவாளர்களுக்கு நன்மை அளித்து வருவதாக அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

தற்போதைய நிலையில் பொட்களுக்கு கூட்டுறவுச் சமாஜம் தமக்கு நயம் ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெக்டரான திரு. ஜேக்கப் பிடம்தன்னை ஒரு இரகசியப் பொலிஸ் எனக்கூறி, தான் வெள்ளவத்தை பொலிசில்

ளுக்கு பொலிசார் வேண்டுகோள் விடுத்திருப்பதோடு தாமும் பலத்த கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். (கா.நி.)

1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30-ம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் இந்தியப் பிரஜைகளாக 35,128 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என இலங்கை அரசாங்கத்தின் புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

31-10-64 லிருந்து 31-10-68 வரை இலங்

# நாரந்தனை கிராமசபைக்கு ஐவர் போட்டியின்றி தெரிவு

அல்லைப்பிட்டி, சனி

நாரந்தனைக் கிராமசபைக்குப் புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்தற்கான நியமனப்பத்திரங்கள் இன்று உதவித்தேர்தல் அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது முதல் ஐந்து வட்டாரங்களுக்கும் அபேட்சகர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

முதலாம் வட்டாரத்தில் நகுலேசபிள்ளை இராமலிங்கமும், 2-ம் வட்டாரத்தில் குமாரவேலு பத்மநாதனும் 3-ம் வட்டாரத்தில் சின்னையா குருசாமியும் 4'ம் வட்டாரத்தில் பாலகிருஷ்ணன் கார்த்திகேசுவும் 5-ம் வட்டாரத்தில் தம்பியப்பா சண்முகலிங்கமும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். இதர வட்டாரங்களில் போட்டியிடுவோர் விபரம் வருமாறு:-

6-ம்வட்டாரம் செ. பே. தம்பிராசா க. தியாகராசா.

7-ம் வட்டாரம் அ. போல்தா. திருஞானசம்பந்தமூர்த்தி.

8-ம்வட்டாரம்-ச. அலேசு, இ. பி. இரத்தினசிங்கம்.


9-ம் வட்டாரம்- நா. திருச்செல்வம், ச. அருமைநாதன், சி. நடராசா.

10-ம் வட்டாரம் சு. கதிரித்தம்பி, சு. கனகசபை, அ. நீக்கிலாப்பிள்ளை, ஜே. சிங்கராயர்.

11-ம் வட்டாரம்: ச. நீக்கிலாஸ், செ. ம. அரியரத்தினம்.

12-ம் வட்டாரம்- கு. இளையதம்பி, பொ. மதனபூபாலன்,

13-ம் வட்டாரம்- வை. மரியான், க. சண்முகநாதன் ந. கணபதிப்பிள்ளை.



வட இந்திய சமண முனிவர்கள் 12 பேர் சமீபத்தில் மதுரை திருஞான சம்பந்தர் ஆதீன மடத்துக்கு விஜயம் செய்து அங்கு இரவு தங்கி இருந்ததோடு பூஜாமூர்த்திகளைப் பற்றி நல்லைஞானசந்த ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் கொடுத்த விளக்கத்தையும் கேட்டு சந்நிதானம் அளித்த விபூதியையும் நெற்றியிலிட்டனர். சமண முனிவர் ஒருவர் மதுரை ஆதீன சந்நிதானத்துடன் அளவளாவுவதை இங்கு காணலாம்.

சுண்டுக்குளி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத் தலைவரான திரு. கு. நேசையா தெரிவித்தார்.

கூட்டுறவு விசாரணைக் கமிஷன் நேற்றுக்காலை முதல் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அங்கத்தவர்களின் சாட்சியங்களை பதிவு செய்தது.

டாக்டர் ஏ. எப். லெயிட்லோ தலைமையில் வந்திருந்த கமிஷனில் இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை, திரு. பனப்பொக்கை, திரு. ரி. டி எல். பீரிஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

திரு, நேசையா மேலும் தெரிவித்திருப்பதாவது:-

யாழ்ப்பாண நகரில் 40 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் 15 கூட்டுறவுக் கடைகளும் சுமார் 90 தனிப்பட்ட கூப்பன் கடைகளும் இப்போது இருக்கின்றன. இவைகளை இணைத்து ஒரு பெரியசங்கத்தை நகரில் நிறுவவேண்டும். அத்துடன் சென்னையிலுள்ள 'காமதேனு' போன்று ஒரு கூட்

ய்ந்த பின்னரே இந்த ஆலோசனை மகஜரில் சேர்க்கப்பட்டதென யாழ்ப்பாணம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தலைவரான திரு. ஏ. ஜேஇராஜ துரைசிங்கம் தெரிவித்தார்.

தனியான ஒரு சங்கம் பண்டகசாலைகளை நடாத்தும் முறையை கிளைச் சங்கங்களுடன் கூடி இன்னமும் ஆலோசிக்கவில்லையென திரு நெல்வேலி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத் தலைவரான திரு என். குமாரசாமியும், அரியாலை பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத் தலைவரான திரு. வி. மயிலுவும் தெரிவித்தார்கள்.

தனிப்பட்ட கிளைச் சங்கங்களை ஒழித்து ஒரே ஒரு பெரிய சங்கத்தை ஸ்தாபிப்பது ஜனநாயக முறையா என கமிஷனைச் சேர்ந்த திரு. கே. ஆழ்வாப்பிள்ளை

அது உண்மையான முறையில் கூட்டுறவாளர்களுக்கு நன்மை அளித்து வருவதாக அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

தற்போதைய நிலையில் பொட்களுக்கு கூட்டுறவுச் சமாஜம் தமக்கு நயம் வைத்து விற்க, பின்னர் கிளைச் சங்கங்கள் தமக்கும் நயம் வைத்து விற்பதால் மக்கள் அதிக நஷ்டமடைகிறார்கள். ஆனால் சி. டபிள்யூ. ஈ. ,லக்ஸலா, விற்பனை இலாகா ஆகியன நேரடியாக பொருட்களை இறக்குமதி செய்து குறைந்த விலைக்கே விற்கின்றன என்றும் இதனால் நகரிலுள்ள சகல கிளைச் சங்கங்களையும் ஒன்றாகச் சேர்த்துஒரே சங்கமாக்கவேண்டும் என்றார்.

விசாரணை இன்றும் நடைபெறும். (கா. நி)

# ஆலயம் பூட்டப்பட்டதற்கு பொலிஸ் அதிகாரிகாரணமாம்

## மட்டுவில் கோவிலுக்கு இம்முறை ரூ. 10000 நஷ்ட

யாழ்ப்பாணம், ஞாயிறு

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவில் மூடப்பட்டு பூசைகள் நடைபெறாமல் இருப்பதற்கு காரணம், பொலிஸ் அதிகாரி ஒருவரின் பயமுறுத்தல்தான் என்று ஆலயபரிபாலன குழு தலைவர் புறக்டர் கே. கதிர்காமசேகரர் நேற்றுத் தெரிவித்தார்.

திரு, கதிர்காமசேகரர் மேலும் கூறியதாவது:-

வழக்கம்போல் இஉவருடமும், பூசைகள் செய்வதற்கான எல்லா ஒழுங்குகளையும் செய்திருந்தோம். கோவில் பணியாட்கள் எல்லா உதவிகளையும் செய்ய முன்வந்திருந்தார்கள். அரசாங்கஅதிபரிடமும், கோவில் மூடப்படுமென்றும், பூசகரும் தொண்டர்களும் மட்டுமே உள்ளே இருப்பார்களென்றும், வெளியில் பொங்கல் வழக்கம்போல் நடைபெறுமென்றும் கூறியிருந்தோம்.

சாவகச்சேரி மாவட்டநிதி மன்றத்தில், ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக ஒருவழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வழக்கு தீர்ப்பு வரும்வரை, கோவில் பூட்டப்பட்டு பூசைகள் நடக்குமென்றும் அரசாங்க அதிபரிடம் தெரிவித்திருந்தோம். வழக்கம்போல பொங்கல் உற்சவம் நடைபெற பொலிஸாரும், காரியாதிகாரியும், கிராமசேவகர்களும், சுகாதார பரிசோதகரும் ஒத்துழைப்பைத்தர முன்வந்திருந்தார்கள். எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், கலவரத்தை உண்டுபண்ணுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் அதிபரே தெரிவித்திருந்தார்.

16-ந் தேதிஇரவு பொலிஸ் அதிகாரி ஒருவர் வந்து கோவில் மனேஜர் திரு. குழந்தைவேலுவைச் சந்தித்தார்' அப்பொழுது நானும் வேறுசிலரும் நின்றோம். ஆலயப்பிரவேசம் செய்பவர்களைத்தாங்கள் தடுக்கமாட்டோம் என்றும், ஆலயப்பிரவேசம் செய்பவர்களைத் தடுப்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்றும், அவசியமேற்பட்டால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டியநிலையும் ஏற்படக்கூடுமென்றும் இது மேலிடத்து உத்தரவென்றும், மனேஜரிடம் கூறிவிட்டுச் சென்றார். இதன்காரணமாகவே மனேஜர் எவருக்கும் சொல்லாமல் கோவிலைப்பூட்டி, மறைந்துவிட்டாரென நான் கருதுகிறேன். பொலிஸ் அதிகாரி பயமுறுத்தியிராவிட்டால் வழக்கம்போல பூசை நடைபெற்றிருக்கும். ஆதலால் இம்முறை பூசை நடவாததற்கு பொலிஸாரே காரணம். சட்டத்தை அமுல் செய்யவேண்டிய பொலிஸார் அவசியமில்லாமல் தலையிட்டு கோவிலைப் பூட்டச்செய்யவேண்டிய நிலைமையை ஏற்படுத்திவிட்டனர். கோவிலில் பூசை நடைபெறாததால், பக்தர்களின் மனம் வேதனையடைந்துள்ளது.

### ரூ. 10,000 வருமானம் இழந்தது

பூசைகள் நடைபெறாததால் இவ்வருடம் சுமார் 10,000 ரூபா வருமானத்தை கோயில் இழந்துள்ளது, படையலுக்கு 25 சதமும், அர்ச்சனைக்கு 50 சதத்திலிருந்து 2 ரூபாவரை அறவிடுவது வழக்கம். சென்ற திங்கட்கிழமை அர்ச்சனை செய்யப்படவில்லை. பக்தர்களிடம் படையல் பணமும் வாங்கப்படவில்லை. இதனால் நான்கு திங்கட்கிழமைகளிலும், நடக்கும் பொங்கல் உற்சவத்தில், கோவிலுக்கு வரவேண்டிய சுமார் 10,000 ரூபா வருமானம் கிடைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# திறப்பு விழாவில் அமைச்சர் திட்டத்துக்கு பாராட்டு

அளவெட்டி, சனி

நாட்டின் பின்தங்கிய மக்களின் போக்குவரத்து வசதியைச் சீர்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட பாலங்களால் கிராமங்கள் முன்னேற்றம் அடைவதோடு விவசாயமும் அபிவிருத்தியடையும்,'

இவ்வாறு யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம் சபாரத்தினம் யாழ் மாவட்டத்துக்கான நவீன பாலத்திறப்பு விழாவில் கலந்துரையாற்றுகையில் கூறினார்.

தெல்லிப்பழை சந்தியிலிருந்து மலர்களாலும் மகர தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட தெல்லிப்பழை அளவெட்டி வீதியூடாக மேல் அரசாங்க அதிபர்உட்பட மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளும் பிரமுகர்களும். ஊர்வலமாக பால அமைப்பு இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இரு மணத்தியாலத்தில் அமைக்கப்பட்ட இப் பாலத்தை தெல்லிப்பழை கிராசபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் திறந்து வைத்தார்.

சுகவீனம்காரணமாக திரு எஸ். ஜே வி. செல்வநாயகம் கலந்து கொள்ளாததால் இப்பாலத்தை இவர் திறந்து வைத்தார்.

மேலரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

எமது நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்த திரு. டி எஸ். சேனநாயக்காவின் சிரார்த்த தினமான இன்று நாட்டின் 22 மாவட்டங்களிலும் பாலங்கள் திறப்பது சாலச் சிறந்தது.

தற்போது கிராமசபைகள் தமது கிராம மக்களுக்கு நல்ல சேவையாற்றபோதிய அதிகாரம் இல்லாததால் அவற்றுக்குகூடிய அதிகாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிஅதிபர் திரு தெ. து. ஜெயரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

தேசிய அரசு இப்படியான பாலங்களை அமைத்து கிராமங்களுக்கு உதவி செய்வதுபோல் நாட்டில் நிலவும் சாதி சமய மொழிவேற்றுமைகளை நீக்கி சிங்கள-தமிழ் ஒற்றுமைக்கு உதவவேண்டும்.

சரித்திரத்தில் இடம்பெறத்தக்க இந்த பால அமைப்பு வேலையை செய்தமைக்கு அமைச்சரை நாம் பாராட்ட வேண்டும்?

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ யோசெப் பேசுகையில் கிராம மக்களின் கஷ்டத்தை நீக்கி விவசாயத்தை பெருக்கும் நோக்குடனே அமைக்கப்பட்ட இப்பாலத்தைப் பயன் படுத்தி கிராம மக்கள் விவசாயத்தை முன்னேற்ற உழைக்க வேண்டும்'' என்றார்.

வலிவடக்கு காரியாதிகாரி திரு. பி. எல் பற்றிக்ஸ் பேசுகையில்:- சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த விழாவை யாழ் மாவட்டத்தில் கொண்டாடுவது எமக்கு பெரும் மகிழ்ச்சியை தரக்கூடியது என்றார்.

தலைவர் தமது தலைமையுரையில் 12 வருடமாக எடுத்த இம்முயற்சி இன்று நிறைவேறியதால் மகிழ்ச்சியடைவதாகக் கூறினர்.

### விடுதலை

கல்கத்தா, மார்ச், 22

நக்ஸல்பாரி இயக்கத்தில் ஈடுபடுவதற்குத் தொடரப்பட்டிருந்த 35 பேரை புதிய மேற்கு வங்க அரசு விடுதலை செய்திருக்கிறது.

# இயந்திரப் படகுடன் மூன்று மீனவரைக் காணவில்லை

## தேடச்சென்ற வள்ளங்கள் திரும்பின

காங்கேசன்துறை, ஞாயிறு

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்களையும் ஒரு இயந்திரப் படகையும் மூன்று தினங்களாகக் காணவில்லை.

வியாழக்கிழமை மயிலிட்டியிலிருந்து ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற அந்தோனிப்பிள்ளை, அருளப்பு, வின்ஸ்சிலோஸ் என்னும் மூவருமே காணமற் போனவர்களாகும். மயிலிட்டி சென். மேரிஸ் கூட்டுறவுச் சங்க இயந்திரப் படகில் சென்ற இம்மூவரில் ஒருவருக்கு இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருப்பதாகவும் இவரது உறவினர்கள் தெரிவித்தனர்

நேற்றைய தினம் இவ்வியந்திரப்படகைத் தேடிச் சென்ற இயந்திரப் படகுகள் இவாகளைக் காணாததினால் கரைதிரும்பியுள்ளது. காங்கேசன்துறை பொலிசாரும் கடற்படையினரும் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளன

### புதுச்சேரி தீ விபத்து

## எம். ஜி. ஆர். நன்கொடை

புதுச்சேரி, மார்ச். 22

புதுச்சேரி தீ விபத்தில் கஷ்டத்துக்குள்ளானவர்களுக்கு மக்கள் திலகம் ரூ. 1400 நன்கொடை வழங்கியிருக்கிறார்.

இந்தப் பணத்தைபுதுச்சேரி முதலமைச்சர், திரு. பரூக் மரைக்காயரிடம் எம். ஜி. ஆர். கையளித்தார். தீ விபத்தால் வீடுகளை இழந்த 14 குடும்பங்களுக்கும் தலா 100 ரூபா வீதம் இப்பணம் பகிர்ந்து கொடுக்கப்படும். இப்பணத்துடன் புதுச்சேரி அரசாங்கத்தின் சார்பில் தலைக்கு 40 வீதம் சேர்த்து முதல்வர் மரைக்காயர் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கினார். தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பழைய முதல் மந்திரி திரு. குபேர் தலா ரூ. 103 வீதம் வழங்கியிருக்கிறார்.

## அங்குய்லா தலைவர் தப்பிவிட்டார்

லண்டன், மார்ச் 22

அங்குய்லாதீவின் தலைவரென தன்னை அறிவித்திருந்த வெப்ஸ்டர் அங்குய்லா தீவிலிருந்து தப்பிச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஐ. நா. சபை உறுப்பு நாடுகள் அங்குய்லா சென்று பிரிட்டிஷ் பாரா துருப்புக்களின் நடவடிக்கைகளை நேரில் பார்ப்பதற்கு பிரிட்டன் அனுமதி மறுக்கக் கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம் நிலவியது. இதை தொடர்ந்தே திரு. வெப்ஸ்டர் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பட்டினியை ஒழிக்க குடும்பநலத்திட்டம்"

அளவெட்டி, ஞாயிறு

"சமுதாயத்துக்கு பாடுபட வேண்டுமென்ற உணர்வு ஆண்களுக்கு மட்டும் ஏற்பட்டால் போதாது. இந்த உணர்வு பெண்கள் மனத்திலும் ஏற்பட்டால் தான் சுகாதார முறைப்படி மக்கள் தமது வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்து வருங்கால பிரஜைகளான குழந்தைகள் நல்ல சமுதாயத்தை உருவாக்குவதற்கு உதவி செய்யலாம். எனவே ஆண்களைவிட பெண்களும் பொதுநோக்குடன் சமுதாய வளர்ச்சிக்கும், சுகாதார வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும்."

இவ்வாறு உலக சுகாதார ஸ்தாபன ஆலோசகர் வைத்திய கலாநிதி திரு. தாகூர் வீமன்காமம் மகா வித்தியாலய ஆரோக்கிய சபைக் கூட்டத்தில் கலந்துரையாற்றுகையில் கூறினார்.

பாரதத்தைச் சேர்ந்த திரு. தாகூர் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி கிராமப் புறங்களில் சுகாதார வளர்ச்சியைப் பற்றி ஆராய்ந்து அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இப்போது கிராமங்களுக்கு விஜயம் செய்து வருகிறார்.

இவருடன் இலங்கை சுகாதார ஸ்தாபன அதிகாரி திரு. கனேவத்தாவும் வந்திருந்தார்.

மகாவித்தியாலய அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வடமாகாண சுகாதாரப் போதனாசிரியர் திரு. கா. பாலசுப்பிரமணியம், திரு. வைத்தீஸ்வரன், சுகாதார மேற்பார்வையாளர் திரு. கந்தையா, கிராமசேவையாளர்கள் திரு வேலும்மயிலும், திரு. நடராசா ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

திரு. தாகூர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

### குடும்ப நல திட்டம்

உலகில் சனத்தொகை வர வர அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதை குடும்ப நலத்திட்டத்தினுல் தான் தீர்க்க முடியும். ஆதலால் மாதர்கள் யாவரும் குடும்ப நலத்திட்டத்தைக் கையாண்டு சுபீட்சமாக வாழ்க்கையை அமைப்பதோடு பட்டினி போன்ற தீமைகளிலிருந்தும் நீங்கலாம்.

இத் திட்டத்தைப்போல குழந்தை வளர்ப்பு முறையையும் கையாண்டால் தான் வருங்கால சமுதாயத்தை நல்ல முறையில் அமைக்கலாம் என்று கூறிய அவர் வீமன்காமம் கிராமத்திலும் வித்தியாலயத்திலும் சுகாதாரம் முன்னேறி யிருப்பதாகப் பாராட்டுத் தெரிவித்தார்.

இலங்கை சுகாதார ஸ்தாபன அதிகாரி திரு. கனேவத்தை பேசுகையில் கிராமப் புறங்களுக்கு சுகாதார அதிகாரிகள் சென்று அங்கு மக்களின் சுகாதார தேவைகளைப்பற்றி விசாரித்து அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராமங்கள் சுகாதாரத் துறையுடன் நின்றுவிடாது எல்லாத் துறையிலும் முன்னேற வேண்டும் என்றும் பருத்தித்துறையில் ஒரு பொறியியலாளர் தனது தொழிலைக்கூடபொருட்படுத்தாமல் சுகாதாரத்துக்கு தொண்டாற்றியது கண்டு தாம் மகிழ்ச்சி அடைந்ததாகவும் எடுத்துக் கூறினார்.

காங்கேசன்துறைத் தொகுதி சுகாதார அதிகாரி திரு செல்லப்பா உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். ஆரோக்கிய சபைசெயலாளர் திரு. ஆ. மார்க்கண்டு நன்றி கூறினார். இதன்பின் தாகூர் உட்பட சுகாதார


ராஜா 69வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
சனிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
மதருஸ் To
பாண்டிச்சேரி

REGAL at Jaffna
Daily 4-45, 7/ 9-45 p.m
Christopher Lee,
Tsai Chin
n
THE FACE OF
FUMANCHU

MANOHARA
JAFFNA
Daily 6-30 9-30 p.m.
Kamran, Shella Kashmiri,


# தீவைப்பு வழக்கில் எதிரிகள் விடுதலை

குரும்பசிட்டி, ஞாயிறு

குப்பிளான் வீடு தீவைப்பு வழக்கு விசாரணை முடிவில் குற்றச்சாட்டை நிரூபிக்க போதிய சாட்சியமின்மையால் ஐந்து எதிரிகளையும் மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் விடுதலை செய்தார்.

வழக்கு விசாரணையின் போது என். அரியகுட்டி என்பவர் சாட்சியமளிக்கையில், 'சம்பவதினம் நான் நித்திரையில் இருக்கையில் வீட்டுக்குள் நுழைந்த யாரோ படுக்கையில்வைத்து என்னைத் தாக்கினார். அந்நேரம் சுமார் 25 பேர்வரை வளவுக்குள் நின்றதைக் கண்டேன். எனக்கு அடிவிழுந்ததும் பயத்தால் வீட்டைவிட்டு ஓடிவிட்டேன். பின்னர் வீடுதிரும்பிவந்து பார்த்தபோது வீடுஎரிந்து சாம்பலாகக் கிடந்ததைக் கண்டேன். ஆனுல் வீட்டுக்கு நெருப்பு வைத்தவர்கள் யார் எனத் தெரியாது" என்று கூறினார்.

குப்பிளானைச் சேர்ந்த ஐந்து நபர்களுக்கு எதிராக கடந்தவருடம் ஆனிமாதம் 17-ம் திகதி குப்பிளான்வாசியான என், அரியகுட்டியின் வீட்டுக்கு தீ வைத்து சேதப் படுத்தி ரூபா 300 நஷ்டம் விளைவித்ததாக சுன்னுகம் பொலிசாரால் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர்,

— —

அளவெட்டி, சனி

வலி-வடக்கில் சிறுபிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுவந்த பால்மா கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனுல் பால் பெறும் நிலையங்களுக்குச் செல்லும் பிள்ளைகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகிறார்களாம்.

## வேலணைக் இ.ச. தலைவர் உறுதி

அல்லைப்பிட்டி, சனி

வேலணைக் கிராமமக்களின் முன்னேற்றம் கருதி அத்தியாவசிய தேவையான மின்சாரம், குடிநீர் வசதி போக்குவரத்து வசதிகள் என்பன பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பேன். என்னை வேலணைக் கிராமசபையின் புதிய தலைவராக தெரிவு செய்ததையிட்டு இப்பகுதி மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு வேலணை கிராமசபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட திரு. மு. குலசேகரம்பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இப்பகுதி மக்களின் முன்னேற்றத்துக்கு கட்சி பேதமின்றி எம்மாலான உதவிகளை செய்துகொடுப்பதாக உறுதியளித்தார்.

## உறங்கியவை வெளிவந்தன

அளவெட்டி, சனி

காங்கேசன்துறை தபால் நிலையத்தில் பலமாதங்களாகக் கிடந்த தபால்பெட்டிகள் மக்கள் பாவனைக்கு ஏற்ற இடத்தில் நாட்டப்பட்டுள்ளது.

இப்பெட்டிகள் பல மாதங்களாக ஏற்ற இடத்தில் இணைக்கப்படாததால் மக்கள் சிரமத்துக்குள்ளாகியிருந்தனர் தபால் பகுதி அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையால் இட்பெட்டிகள் இப்போது உரிய இடங்களில் நாட்டப்பட்டுள்ளன.

# கிறீன்பீல்ட் கோஷ்டியிடம் சிங்கிங்பிஷ் தோல்வி

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரியாலை சுதேசிய விழாவையெட்டி யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும், நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியில், 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக்கழகமும், 'சிங்கிங்பிஷ்' 'ஏ' பிரிவுக்கோஷ்டியும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் ... கோஷ்டியை தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே.நி.)

## செல்வக்குப் பாராட்டு

## இன்றைய பலன்

(23-3-69)

பங்குனிமாதம், 10 உ

ஞாயிற்றுக்கிழமை

திதி- பஞ்சமி பகல் 1-40 மேல் சஷ்டி.

நட்சத்திரம்- கார்த்திகை பகல் 3-10 மேல் ரோகிணி.

ராகுகாலம்- 4-46-6-16.

சுபநேரம்-9-16-10-46.

இன்று பிறந்தவர்களுக்கு- வணிகவிருத்தி வாழ்விலும் திருப்தியும் வஞ்சகர் உறவு வழக்கில் முடியும். எண்ணிச்செய்வதால் கன்னியம் சேரும். கண்ணியர் வாழ்வில் களிப்பூட்டும் நிகழ்ச்சியும், தனியார்துறை தொழில் விருத்தியும், தன்னம்பிக்கை உடையவர்க்கு தனவரவும் உண்டாம்.

மேஷம்- குடும்பக்கவலை குமைச்சல் அதிகம்.
ரிஷிபம்- வாக்குவிருத்தி வரவிலும் திருப்தி.
மிதுனம்- அடுத்துக் கெடுப்பர், அவதானம் வேண்டும்.
கடகம்- தாய்வழிநலன் மனை அலங்காரம்.
சிம்மம்- புத்திரர் புகழ் புதுமையில் நாட்டம்.
கன்னி- பகைமூட்டம், பார்த்துநட.
துலாம்- இல்லறம் இனிக்கும், இனியவை நடக்கும்.
விருச்சிகம்- தோல்வி அணைக்கும் தொல்லைகள் தவிர்
தனுசு- தாராளசிந்தை, தந்தைவழி ஆதரவு.
மகரம்- பிரயாண விருப்பு, பிறாசகாயம்
கும்பம்- தனமும் குணமும் பண்புடன் சேரும்.
மீனம்- மேல்இடத்து எதிர்ப்பு தொழிலில் கவலை.

—சோதிடக்கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

# 'ரயிலில் மதுபான விற்பனையை தடைசெய்க'

## காங்கேசன்துறை பட்டினசபை கோரிக்கை

அளவெட்டி, சனி

'புகையிரத மதுபான விற்பனையை தடைசெய்க'' என உள்நாட்டு அமைச்சரைக் கோரும் தீர்மானம் ஒன்று காங்கேசன்துறைப் பட்டினசபையில் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி சபை உபதலைவர் திரு. ச. சிவனடியார் தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்ற மாதாந்தக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தின் விபரம் வருமாறு:

அரசாங்கம் மக்களை வாழ்க்கைச்செலவைக்குறையுங்கள் சிக்கனமாகச் சீவியுங்கள். கமத்தொழிலை எல்லோரும் அபிவிருத்தி செய்யுங்கள். கைத்தொழில் விஸ்தரிப்பு செய்யுங்கள் என்று கூறிக்கொண்டு, மறுபுறத்தில் மக்களின் வாழ்க்கைச் செலவை அநியாயமான முறையில் ஓர் பிரயோசனமுமில்லாது தீயவழியில் இழுத்துக்கொண்டுசெல்கின்றது. அதாவது புகையிரத சிற்றுண்டி வண்டியில் மதுபானம் விற்பனைசெய்யப்பட்டுவருகிறது.

குறைந்தது நாளொன்றுக்கு மூவாயிரம் ரூபாவுக்கு மேல் மாத்திரம் இவ்விதம் விரயமாகின்றது. இவ்விதமே இலங்கையில் எல்லாப்பகுதிகளிலும் நடக்கின்றது. ஆகவே புகையிரதங்களிலிருந்து மதுபானம் விற்கும் உத்தரவை ரத்துச் செய்யவும்.

# மாமன் வீட்டுக்கு தீ வைத்தாராம்

குரும்பசிட்டி, சனி

மாமனின் வீட்டுக்கு தீ வைத்து சேதப்படுத்தியதாக மருமகன்மேல் குற்றம் சுமத்தி சுன்னுகம் பொலிசார் தொடர்ந்துள்ள வழக்கு மல்லாகம் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது எம். தம்பிப்பிள்ளை, பீ. சின்னத்தங்கம் ஆகியோர் சாட்சியமளித்தனர். எதிரி நிரபராதி எனத் தெரிவித்ததை அடுத்து மேல்விசாரணை அடுத்தமாதம் 22-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குப்பிளான் வாசியான எஸ். அருணுசலம் என்பவர் முத்துவேலு தம்பிப்பிள்ளை என்பவரின் வீட்டுக்கு இவ்வருடம் மாசிமாதம் 20-ம் திகதி தீ வைத்து நாசப்படுத்தியதாக இவ் வழக்கு சுன்னுகம் பொலிசாரால் தாக்கல்செய்யப்பட்டுள்ளது

எதிரிதரப்பில்வழ கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## ஆவரங்கால் கொலைவழக்கு

யாழ்ப்பாணம், சனி

ஆவரங்கால் கொலைவழக்கு விசாரணை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஒ. எல். டி. கிரெட்ஸர் முன்னிலையில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

இவ்வழக்கில், ஆவரங்காலில், 68ம் ஆண்டு ஜனவரி மாதம் 3ந் தேதி முருகன் தம்பிராசா என்பவர் பரமநாதன் லிங்ககுமாரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

இவர் பிரிட்டனுக்கு பயிற்சி பெறுவதற்காகச் செல்லவிருக்கிறார். வடபகுதிச் சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு உயர் அதிகாரியாக பி. டி. ராமநாயக்கா நியமனம் பெறுவார்.

## வசாவிளானில் பொதுநூல்நிலையம்

குரும்பசிட்டி, சனி

பத்தாயிரம் ரூபாய் செலவில் வசாவிளான் சந்திக்கு அருகில் அமைக்கப்படவிருக்கும் மத்திய நூல்நிலையத்துக்கான அடிக்கல்லை நாட்டி

## றேஞ்செஸ் வெற்றி

ஊர்காவற்றுறை, சனி

கரம்பொன் விளையாட்டுக் கழகத்திற்கும், ஊர்காவற்றுறை றேஞ்செஸ் விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் பந்


# விளம்பரம்

## லொறி விற்பனை

வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் பாவிப்பிலிருக்கும் ''இஸ்யூஸ்'' லொறி தொடர் இலக்கம் 22 ஸ்ரீ 5937 விற்பனைக்கு உண்டு. லொறி நல்ல நிலைமையிலிருக்கிறது. ஒரு சாரதியினுல்மாத்திரம் நல்ல முறையில் பாவிக்கப்பட்டுள்ளது.

விலைகோரி விண்ணப்பங்கள் 1969-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 24-ந்திகதி மு.ப. 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

லொறியைப்பார்வையிட விரும்புவோர் போயா நாட்களில் மேற்படி சமாஜத்தில் வந்துபார்வையிடலாம்.

விண்ணப்பங்கள் பதிவுக் கடிதமூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

சி. உ. வல்லிபுரம்
கௌரவகாரியதரிசி,
தலைவர்,
வ.வ.ப.நோ.கூ.ச.சமாஜம்.
நெடுங்கேணி. 1239

# வரிவிளம்பர

## விற்பனைக்கு

றலி சைக்கிள்:

பாவித்த றலி சைக்கிள் ஒன்று எம்மிடம் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் 30/4/69-க்கு முன்பாக தமது விலையக் குறித்துக் கௌரவ காரியதரிசி, யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி, பிரதான வீதி, என்ற முகவரிக்கு, மேல் உறையில் ''சைக்கிள் விற்பனை'' என்ற குறிப்புடன் பதிவுத்தபாலில் அனுப்பவும். சைக்கிளை வங்கி நேரங்களில் பார்வையிடலாம். 786

## திருமண அழைப்பு

சங்கானை லீலா ஜுவல்லர்ஸ், செல்வன் கே. எம். நடராசாவிற்கும் செல்வி இராஜேஸ்வரிக்கும் பங்குனி 11ம் நாள் (24-3-69) திங்கட்கிழமை பகல் 1மணிக்கும் 3 மணிக்கும் இடையில் திருமணம் மணமகள் இல்லத்தில் [பொன்கிளர், வட்டுக்கோட்டை] நடைபெறும். வரவேற்பு மணமகன் இல்லத்தில் நடைபெறும். நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படவில்லை. இங்ஙனம்தங்கள் நல்வரவைநாடும் கே. எம். ஐயாத்துரை தம்பதிகள். 785

நம்பிக்கையான [illegible]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Tsai Chin
n
THE FACE OF
FU MANCHU

MANOHARA
JAFFNA
Daily 6-30 9-30 p.m.
Kamran, Shella Kashmiri,
Majnu
in
LALACH
(Hindi

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 10-00
...போயா, போயா 2-30
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த
தேர்த்திருவிழா


...ஞர்.

காங்கேசன்துறைத் தொகுதி சுகாதார அதிகாரி திரு செல்லப்பா உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். ஆரோக்கிய சபைசெயலாளர் திரு. ஆ. மார்க்கண்டு நன்றி கூறினார். இதன்பின் தாகூர் உட்பட சுகாதார அதிகாரிகள் அடங்கிய கோஷ்டியினர் மாதிரிக் கிரமத்தை பார்வையிட்டனர்.

## கபாலி விநாயகர் தரிசனம்

ஊர்காவற்றுறை, சனி

இந்தோனேஷியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கபாலி விநாயகர் திருவுருவம் ஊர்காவற்றுறை சிவாலயத்திலும், காரைநகர் யாழ்ரன் கல்லூரியிலும் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது.


கெப்பிட்டல் பிளாஸா மைலன்
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (ஹற்றன்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். வி. ரங்கராவ், பானுமதி
முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன்,
நாகேஷ் நடித்த
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
பூவும் பொட்டும்
டைரக்ஷன்: தாதாமிராசி

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி, விஜயா,
முத்துராமன்,
எஸ். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
ஊட்டி வரை உறவு
(ஈஸ்ட்மென் கலர்)

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்
மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
எஸ். எஸ். வாசன் அவர்களால்
ஈஸ்ட்மன் கலரில் படமாக்கப் பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு
கோலாகல காட்சியையும்
மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா
ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்று
வதையும் பார்க்கலாம்!


...அரியாலை சுதேசிய விழாவையொட்டி யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும், நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியில், 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக்கழகமும், 'சிங்கிங் பிஷ்' 'ஏ' பிரிவுக்கோஷ்டியும் மோதிக்கொண்டன.

இப்போட்டி ஆரம்பமாகியவுடன், இரு கோஷ்டியினரும் மிகவேகமாக விளையாடத் தெடங்கியமையால் 10 நிமிடங்களின்பின் கிறீன் பீல்ட் கோஷ்டியின் இடது உள்முன்னணிவீரர் ஜெயராசா மிகசாதுரியமாக ஒரு கோலைப்போட்டார். இடைவேளையின்போது கிறீன் பீல்ட் கோஷ்டி 1- 0 கோலைப் பெற்றிருந்தது.

இடைவேளையின்பின் சிங்கிங்பிஷ் கோஷ்டியின் முன்னணி வீரர் பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை உண்டாக்கிய போதிலும், அவையாவும் கிறீன்பீல்ட் கோஷ்டியின் பின்னணி வீரர்களால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன. ஆட்டம் முடியும் வரையும் இரு கோஷ்டியினரும் மேலும் கோல்கள் எதுவும் போடாத நிலையில் ஆட்டம் முடிவுற்றதால் கிறீன்பீல்ட் கோஷ்டி 1--0 கோலால் சிங்கிங்பிஷ்...

## வளர்மதி வென்றது

யாழ்ப்பாணம், சனி

அரியாலை சுதேசிய விழாவையொட்டி நடாத்தப்படும், மென்பந்து கிரிக்கெட் போட்டியில், வளர்மதி மன்றம், 'சூட்டிங் ஸ்டார்' கோஷ்டியை வென்றது.

வளர்மதிமன்றம் தனது முதல் இன்னிங்சில் மொத்தம் 68 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்சில் 81 ஓட்டங்களையும் பெற்றது. சூட்டிங்ஸ்ரார்கோஷ்டி முதல் இன்னிங்சில் 44 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்சில் மொத்தம் 25 ஓட்டங்களையும் பெற்றது.

ஆட்டமுடிவில் வளர்மதி மன்றம் 80 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (தே. நி.]

...தது.

இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே. நி.)

## சேவைக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பெண் பாடசாலைத் தலைமை ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி ஜி. எம். செல்லத்துரை 22 வருட சேவையின்பின் ஓய்வுபெறுவதை முன்னிட்டு பிரிவுபசாரமொன்று மேற்படி பாடசாலை மண்டபத்தில் முதலியார் செ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

முதலியார் முத்துத்தம்பி அவரது சேவையைப் பாராட்டிப் பேசுகையில் திருமதி செல்லத்துரை திறமையுடன் தமது கடமையைச்செய்துள்ளார் என்றும் அவரிடம் படித்தவர்கள் உயர்பதவிகள் வகித்து வருவது அவரது சேவையின் உயர்வைக்காட்டுவதாகவும் தெரிவித்தார்.

திரு. எஸ். எஸ். கே. வாளரசன், திருமதி த. யோகாம்பிகை, திரு. ஏ. தனபாலசிங்கம் ஆகியோரும் திருமதி செல்வத்துரையின் சேவைக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். திருமதி செல்வத்துரை பாராட்டுக்குநன்றி கூறினார்.


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
கல்யாணகுமார், முத்துராமன், தேவிகா
நடித்த
நெஞ்சம் ஓர் ஆலயம்

யாழ்ப்பாணம்
வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன், ராஜ்ஸ்ரீ, நாகேஷ்,
சுந்தரராஜன், ஜெயபாரதி
நடித்த
அனுபவி ராஜா அனுபவி


...திருமலை வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 23—3—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 பண்ணுரிந் தமிழ், 6-45 பா வளம், 7-00 மத்தாப்பு, 7-30 முத்திநெறி, 8-00 இசைவேளை, 9-30 பேச்சு, 9-45 பாட்டு

## ஊர்காவற்றுறை வெற்றி

ஊர்காவற்றுறை, சனி

...லேடன் வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்தப்படும் தீவுப்பகுதி கரபந்தாட்டப் போட்டி ஒன்றில் ஊர்காவற்றுறை றேஞ்செஸ் விளையாட்டுக்கழகமும், புங்குடுதீவு சிவலைப்பிட்டி விளையாட்டுக்கழகமும் கலந்துகொண்டன. முதல் இரு ஆட்டங்களிலும் ஊர்காவற்றுறை றேஞ்செஸ்கழகம் வெற்றிபெற்றது.

## மிருதங்க அரங்கேற்றம்

குரும்பசிட்டி, சனி

இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை மண்டபத்தில் எதிர்வரும் 24-ம் திகதி திங்கட்கிழமை மாலை யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு தி. முருகேசம்பிள்ளை தலைமையில் செல்வன் வே தபோதநாயகத்தின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெறவிருக்கின்றது.

### வசாவிளானில் பொதுநூல்நிலையம்

குரும்பசிட்டி, சனி

பத்தாயிரம் ரூபாய் செலவில் வசாவிளான் சந்திக்கு அருகில் அமைக்கப்படவிருக்கும் மத்திய நூல்நிலையத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைக்க ஆனி மாதம் உத்தியோகரீதியில் யாழ். மாவட்டத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் பிரதம மந்திரியை அழைப்பதென்ற தீர்மானம் மயிலிட்டி கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கிராமசபைக் காரியாலயத்தில் புதன்கிழமை திரு என். கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பலாலியில் சந்தை நிறுவ உள்ளூராட்சி அமைச்சிடம் ரூபா 50 ஆயிரம் கடன் கோருவதெனவும், தற்போது வசாவிளானில் உள்ள இலவச ஆயுள்வேத வைத்தியசாலையை பலாலிக்கு இடமாற்றம் செய்வது எனவும் தீர்மானங்கள் நிறைவேறின.

## இடமாற்றம்

நாவற்குழி, சனி

நுவரெலியா புனித கிறிஸ்தவக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய ஆசிரியர் திரு. ஏ. ஆசீர்வாதம் இம்மாதம் முதல் நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## றேஞ்செஸ் வெற்றி

ஊர்காவற்றுறை, சனி

கரம்பொன் விளையாட்டுக் கழகத்திற்கும், ஊர்காவற்றுறை றேஞ்செஸ் விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் பந்தாட்டப் போட்டியில் ஊர்காவற்றுறை றேஞ்செஸ் கழகம் 2 விக்கெட் 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது

## டேபிள் டெனிஸ் இறுதிப் போட்டி

சங்கானை சனி

வலிகாமம் மேற்குப் பகுதியில் நடைபெற்றுவந்த டேபிள் டெனிஸ் சுற்றுப் போட்டி இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

பல விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவந்த இப் போட்டிகளில் மானிப்பாய் ''றெட் றேஞ்சஸ்'' முதலாம் இரண்டாம் பிரிவுகளில் அமோக வெற்றியீட்டியுள்ளது,

வெற்றிக் கேடயத்துக்கான இறுதிப் போட்டி இம்மாதஇறுதியில் மானிப்பாய் செல்லமுத்து வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறும்.


...வினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படவில்லை. இங்ஙனம் தங்கள் நல்வரவைநாடும் கே. எம். ஐயாத்துரை தம்பதிகள். 785

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக்கொண்டு, காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாகத் தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி. குப்தி வித்யாதலைய, நிட்டம்புவ. 762


## சைக்கிள் திருட்டு இங்கு அதிகரிப்பு

புலோலி சனி

மந்திகை ஆஸ்பத்திரியில் சைக்கிள் திருட்டு இப்போது அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது.

ஆஸ்பத்திரியில் நிறுத்தப்பட்டிருந்த வெளியாருடைய இரு புதியசைக்கிள்கள் ஓரே நாளில் திருட்டுப்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது. பொலிஸாரின் கண்காணிப்பு குறையும்போதே இவ்வித திருட்டுகள் அதிகரிப்பதாக கூறப்படுகிறது.


மஸி-பெர்குசன் 135
ட்ராக்டர்கள்
உடனடி விநியோகத்திற்கு
இப்பொழுது கிடைக்கும்

ஏற்கனவே எங்களிடமோ அல்லது எங்கள் விற்பனையாளர்கள், கிளை ஸ்தாபனங்கள் ஆகியவற்றிடம் ஓடர் செய்த வாடிக்கையாளர்களும், சிறுபோக வேளாண்மைக்கு மஸி--பெர்குசன் ட்ராக்டர்கள் தேவைப்படுபவர்களும் எம்முடன்உடனடியாகத் தொடர்பு கொண்டு ட்ராக்டர்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

பிரவுண் அண்ட் கம்பனி லிமிட்டெட்,
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதிஸ்ஸ ரேட்,
கொழும்பு-10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்னும் அமைதிக்காக

# தனிப்பட்ட முறையிலும் பேச்சுவார்த்தை நடக்கிறது

## அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் தகவல்

வாஷிங்டன், மார்ச் 22

வியட்னுமில் அமைதியை ஏற்படுத்துவதற்காக தனிப்பட்ட முறையிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இத்தகவலை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. லெயார்ட் அறிவித்திருக்கிறுர். செனட் உப கமிட்டி ஒன்றில் பேசிய திரு. லெயார்ட், வியட்னுமில் அமைதி ஏற்படுத்துவதற்கு பாரிஸில் நடைபெறும் பேச்சுக்களுடன் தனிப்பட்ட முறையிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன வென்ருர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் பற்றிய விபரம்எதையும் அவர் தெரிவிக்கவில்லை.

அதிபர் நிக்ஸனின் ஆட்சி வியட்னுமில் சண்டை நிறுத்தம் ஏற்படவேண்டுமென்பதில் அதிக அக்கறை கொண்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளையில் அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் கலிபோர்ணியாவுக்குப் பறந்து போய் இருக்கிருர். அங்கு வியட்னும்நிலைகுறித்துதமது முக்கிய ஆலோசகர்களில் ஒருவரான திரு. பங்கருடன் அவர் ஆலோசனைகள் நடத்துவார்.

அங்குய்லாவுக்கு

# பிரி. பாராதுருப்புக்களுக்கு பதில் ராணுவ எஞ்சினியர்கள் போவர்

## பிரிட்டன் நடவடிக்கை

லண்டன், மார்ச். 22

அங்குய்லாவில் இறங்கியுள்ள பிரிட்டிஷ் பாராதுருப்புகள் கூட்டம் கூட்டமாக திருப்பியழைக்கப்படுவார்கள் என்று பிரிட்டன அறிவித்திருக்கிறது.

திருப்பியழைக்கப்படும் பிரிட்டிஷ் துருப்புகளுக்குப் பதில் ராணுவ எஞ்சினியர்களை அங்கு பிரிட்டன் அனுப்பவிருக்கிறது. இந்த எஞ்சினியர்களில் ஒருபகுதியினர் நாளைய தினம் அங்கு புறப்படுகிருர்கள் மிகுதிப் பகுதியினர் பின்னர் அனுப்பப்படுவார்கள். அங்கு சிவில் நிலைமைகளை ஆராய்வதற்காக இந்த எஞ்சினியர்கள் அனுப்பப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

அங்குய்லாவில் போய் இறங்கியுள்ள பிரிட்டிஷ் துருப்புகள் படிப்படியாகத் திருப்பியழைக்கப்படுவார்கள். அவசியமானுல் ஒரே தடவையில் திருப்பி அழைக்கப்பட்டுவிடுவர்.

அங்குய்லாவில் ஒருசில கும்பலைச் சேர்ந்தவர்கள் தங்கள் பைகளை நிரப்புவதில் ஈடுபட்டிருப்பதை தடுத்து நிலையான அமைதி ஏற்படுத்துவதற்காகவே ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி திரு. மைக்கார் ஸ்டூவர்ட் கூறியிருக்கிருர்.

### ஐ. நா. கொலனி எதிர்ப்பு கமிட்டி கோரிக்கை

அங்குய்லாவில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை நேரில் கண்டு அறிவதற்காக அங்கத்துவ நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கோஷ்டியொன்றை அனுப்பவேண்டும் என்று ஐ. நா. கொலனியல் எதிர்ப்புக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இத்தீர்மானத்தை எதிர்த்து: கமிட்டியிலிருந்து பிரிட்டன் வெளியேறியது. இந்தப்பிரச்னை ஐ. நா. அதிகாரத்தின் கீழ் வரவில்லையென்று பிரிட்டனும் அமெ

# அலேக் விஜயநிர்மாலா இரகசியத் திருமணம்

## இஸ்ரேல் விமானத்தை சுட்டு வீழ்த்தினர்

அம்மான், மார்ச் 22

நேற்று ஜோர்டானிய தரைப்படையினர் இஸ்ரேலிய சண்டைவிமான மொன்றை சுட்டு வீழ்த்தினர்கள்.

ஜோர்டானிய மன்னர் ஹுசேன் பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற இரண்டுமணிநேரச் சண்டையின்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சுடப்பட்டு வீழ்ந்த இஸ்ரேலியவிமானத்தின் விமானி மரணமாகியதாகவும் ஜோர்டான் கூறியது.

தனதுவிமானம் சுடப்பட்டதை இஸ்ரேலும் ஊர்ஜிதம் செய்திருக்கின்றது.

அண்ணு ஆஸ்பத்திரி

## கருணநிதி அடிக்கல் நாட்டினுர்

சென்னை, மார்ச் 22

காஞ்சிபுரத்தில் அமரர் அண்ணுதுரையின் பெயரில் நிர்மாணிக்கப்படவிருக்கும் புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கான அடிக்கல்லை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணநிதி நேற்று நாட்டினுர். வெளிநாட்டு உதவியுடன் இந்த ஆஸ்பத்திரி கட்டப் படவிருக்கின்றது.

## இளைஞர் வாலிநிலையம்

இந்தியாவில் இளைஞர்

## "பண்டாரநாயகாவுக்கு பெரியார் தந்தகடிதங்கள்"

### திரு. வி. பொன்னம்பலம் தகவல்

பருத்தித்துறை, சனி

"நான் இந்தியாவில் படித்த காலத்திலே இராமசாமி பெரியார் தந்த கடிதங்களை காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவுக்கு கொடுத்துள்ளேன். தி. மு. க.வினர் பலர் புத்தமதத்தில் பெரு மதிப்பு வைத்துள்ளதால் தங்கள் குழந்தைகளுக்கு புத்தரின் பல்வேறு நாமங்களையும் சூட்டியுள்ளனர்."

இவ்வாறு நெல்லியடி மத்தியம காவித்தியாலயத்தில், நடைபெற்ற சரித்திர அரசியல் மன்றக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய திரு. வி. பொன்னம்பலம் கூறினுர்.

திரு. எஸ். அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் அமரர் அண்ணுதுரையின் ராஜதந்திரத்தைப் புகழ்ந்ததுடன், இந்திய அரசியலில் அவருடைய பங்கு பற்றியும் விளக்கினுர்.

## 'சங்கத்தைகலைக்கும் அதிகாரம் சபையிடம் கையளிக்கவும்'

நல்லூர் சனி

'கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதனை தனியார் கம்பனி மூலம் நடத்தப் படவேண்டும். கூட்டுறவுப் பரிசோதகர்கள் மூலம் இவை சோதனை செய்யப்படுவதால் ஊழல்கள் மேலும் வளர இடமளிக்கிறது.'

இவ்வாறு கூட்டுறவு ருேயல் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கக் காரியதரிசி திரு. எஸ். பத்மநாதனும் அனலைதீவைச் சேர்ந்த திரு ஐ. நடராசாவும் தெரிவித்தனர்.

கூட்டுறவு விசாரணைக் கமிஷன் நேற்றுக்காலை முதல் வீரசிங்கம் மண்டபத்தில் அங்கத்தவர்களின் சாட்சியங்களைப் பதிவு செய்தது.

மேலும் இவர்கள் தெரிவித்ததாவது:-

சங்கத்தின் லாபத்தை பங்கீடு செய்வதில் கூட்டுறவு ஆணையாளருக்கு அதிகாரம் இருக்கப்படாது. சங்கப் பொதுக் கூட்டத்துக்கே அந்த அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

சங்கத்துக்கும் அங்கத்தவர்களுக்கும் உள்ள பிணக்குகள் நீதிமன்றங்கள் மூலம் தீர்கப்பட வேண்டும். மத்தியஸ்தர்களை ஆணையாளர் நியமிக்கப்படாது. சங்கங்களை கலைக்கும் அதிகாரம் அமைச்சரிடம் இல்லாமல், பொதுக் கூட்டத்திடம் கையளிக்கப் படவேண்டும். மக்களுக்காக நடத்தப்படும் சங்கத்தை கலைக்கும் பொறுப்பு மக்களிடமே இருத்தல் வேண்டும்.

## உ. பிரதேசில் தெ. இந்திய மொழி

புதுடில்லி மார்ச் 22

தென்னுட்டு மொழியொன்று உத்தரப்பிரதேசத்தில் கட்டாயபாடமாகப் போதிக்கப் படவிருக்கின்றது.

உத்தரபிரதேசத்தில் தென்னிந்தியாவில் வழ

## சமதர்மஆட்சியில்தான் தமிழருக்கு சகவாழ்வு

### லங்கா தோட்ட தொழிலாளர் யூனியன் பிரதிநிதி கூறுகிருர்

நாவலப்பிட்டி, சனி

'உலகத்திலே இன விரோதத்தைக் கிளப்பிய எந்தத் தேசமும் முன்னேற்றம்பெற்றதாக வரலாறு இல்லை. அதேபோல ஜாதிவெறியே மூட்டுகின்ற எந்தவொரு சமூகமும் சுபீட்சம் காண முடியாது. பொதுத் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் சிங்கள வகுப்புவாத, தமிழ் வகுப்புவாத அரசியல்வாதிகள் பொதுமக்கள் மத்தியில் ஆவேச வார்த்தைகளைக் கூறி மக்களைக் கிளர்ச்சி கொள்ளச்செய்து அதன் மூலம் அரசியல் லாபம்பெற நினைக்கின்றனர். மீண்டும் ஒருமுறை 1958 வகுப்புக் கலவர சூழ்நிலையை உருவாக்க முயல்கின்றனர்'

இவ்வாறு லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டி மாவட்டப் பிரதிநிதியான திரு. யூ. நவரட்ணு, இம்பூல்பிட்டி தோட்டத்துக்கருகில் நடைபெற்ற யூனியன் கூட்டமொன்றிற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினுர்.

திரு. நவரட்ணு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'சர்வதேச கொள்கை அடிப்படையில் இயங்கும் நாங்கள், 'நாம்சிங்களவர் இயக்கத்துக்கும்சரி 'நாம் தமிழர்' இயக்கத்திற்கும்சரி நேர் விரோதமானவர்கள். அத்தகைய இயக்கங்களால் நாட்டிற்கும் இனத்திற்கும் நன்மை விளையாது. சிங்களவர்களோ தமிழர்களோ பிரிந்துநின்ருல் தேசிய முன்னேற்றம் ஏற்படாது. உண்மையான சமதர்ம ஆட்சி ஏற்படுகையில்தான் சிறுபான்மையினத்தவரின் முன்னேற்றம் தோன்றும். இதைத் தமிழர்கள் மறந்தால் அவர்களுக்கு ஒரு போதும் சுகவாழ்வு கிடைக்காதென்பதை தீர்க்கதரிசனமாகக் கூறிவைக்கின்றேன்.

திரு. கே. ஷெல்டன் டிசில்வா, திரு. ஜி. பியதாசா ஆகியோரும் பேசினர்.

## 'இருவர் பிடித்திருக்க ஒருவர்கழுத்தில்வெட்டினுர்"

### ஏழாலை கொலை வழக்கில்சாட்சியம்

குரும்பசிட்டி சனி

"காலஞ் சென்றவரை 3-ம் 4-ம் எதிரிகள் கைகளால் தாங்கிப்பிடிக்க 1-ம் எதிரி கழுத்தின் பின்புறத்தில் கத்தியால் வெட்டினுர்." இவ்வாறு கதிர்காமர் இராசையா என்பவர் மல்லாகம் நீதிபதி திரு, எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஏழாலை கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

சாட்சி இராசையா விசாரணையின்போது மேலும் கூறியதாவது;-

சம்பவதினம் மாலை 4மணியளவில் எனது தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருக்கையில் 3-ம் எதிரியின் தோட்டத்தில் எதிரிகள் நால்வரும் வெங்காயம் கிண்டிக்கொண்டு நின்றனர். காலஞ் சென்றவர் அப்போது வாய்க்கால் வழியாக தனது தோட்டத்திலிருந்து வருகையில் 3-ம் எதிரி "அடே நல்லையா நில்லடா" என சத்தமிட்டது எனக்கு கேட்டது. பின் 3-ம் எதிரி இறந்தவரை நோக்கி ஓடினுர். 1-ம் 2-ம் 4-ம் எதிரிகள் 3-ம் எதிரியை

காலஞ் சென்றவர் புகையிலைத் தோட்டத்துக்குள் இறங்கி விட்டார்அந் நேரம் 2-ம் எதிரி தான் வைத்திருந்த ஆயுதத்தால் இரு தடவை முதுகில் இறந்தவருக்கு அடித்தார். 3-ம் 4-ம் எதிரிகள் இறந்தவரை தாங்கிப் பிடிக்க பின்னர் 1-ம் எதிரி கத்தியால் வெட்டினுர். வெட்டு விழுந்ததும் 3-ம் 4ம் எதிரிகள் கையை விட்டதும் இறந்தவர் நிலத்தில் விழுந்தார். எதிரிகள் ஓடிவிட்டனர்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபின் எதிரிகளைத் தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு மேல் விசாரணையை நீதிபதி ஒத்திவைத்தார்.

1-ம் 2-ம் எதிரிகள் சார்பில் அட்வகேற் ஆர். ஈ. தம்பிரத்தினம் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர் 3-ம் 4-ம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர்கள் ஆர் ஜே. செல்வரத்தினம் ஆஜரானுர். பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் ரி. தம்பிரத்தினம்வழக்கைநடாத்தி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அனுப்பப்படுவார்கள். அங்கு துவதற்காகவே ராணுவ

# அலேக் விஜயநிர்மலா இரகசியத் திருமணம்

சென்னை, மார்ச் 22

பணமா பாசமா படத்தில் நகைச்சுவைப் பாத்திரத்தில் நடித்த 'அலெக், விஜய நிர்மலா காதல் திருமணம் புரிந்துகொண்டார். 'எலந்த பழம்' என்ற பாட்டுக்கு அபிநயம்பிடித்து ரசிகர்களின் மனதில் இடம்பெற்ற இவர் தெலுங்கு நடிகர் கிருஷ்ணவை இரகசியமாகத் திருமணம் புரிந்து கொண்டார். இவருக்கு ஏற்கனவே ஒரு கணவர் உண்டு. விஜய நிர்மலா தனது புதுத் திருமணம் பற்றி பின்வருமாறு நிருபர்களிடம் கூறினார்.

என்னுடைய முதல் கணவர் கிருஷ்ணமூர்த்தியை நான் காதலித்தே திருமணம் செய்துகொண்டேன்.

என் சகோதரருடன் அவர் என் வீட்டுக்கு வருவார். காதல் ஏற்பட்டது. திருமணம்செய்துகொண்டோம்

நான் சினிமா உலகில் நுழைந்ததும் நாங்கள் ஒரு உடன்பாடு செய்துகொண்டோம். 'சினிமா உலகில் நுழைகிறாய் ஏதாவது தவறு செய்தால் என்னிடம் சொல்லிவிடு' என்று கூறினார். நானும் அதற்கு சம்மதம் தெரிவித்தேன்.

இதனால் நான் கிருஷ்ணவை காதலிப்பதையும் அவரைக் கல்யாணம்செய்துகொள்ள தீர்மானித்து இருப்பதையும் என் கணவரிடம் கூறினேன். அவர் உடனே 'சரி' என்று சொல்லிவிட்டார்.

வக்கீல் மூலமாக நாங்கள் இருவரும் சண்டை எதுவும் இல்லாமல் சமாதானமாக பிரிந்துகொண்டோம்.

ஒன்றரை மாதத்திற்கு முன்பு நான் கிருஷ்ணவைத் திருப்பதியில் திருமணம் செய்துகொண்டேன்.

இது என் வாழ்க்கைப் பிரச்னை. என் மனச்சாட்சிக்கு இது நல்லது என்று பட்டது. திருமணம் செய்துகொண்டேன்.

டும் என்று ஐ.நா. கொலனியல் எதிர்ப்புக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இத்தீர்மானத்தை எதிர்த்து கமிட்டியிலிருந்து பிரிட்டன் வெளியேறியது. இந்தப்பிரச்னை ஐ. நா. அதிகாரத்தின் கீழ் வரவில்லையென்று பிரிட்டனும் அமெரிக்காவும் அறிவித்துள்ளன. ஐ. நா. தூதுக்குழு அங்குய்லா போவதற்கு பிரிட்டன் அனுமதிவழங்காது என்று கருதப்படுகின்றது.

## ம. பிரதேசத்தில் விரைவில் புது மந்திரிசபை

புதுடில்லி, மார்ச். 22

மத்தியபிரதேசத்தில் விரைவில் புதிய மந்திரிசபை நிறுவப்படும் என்று கவர்னர் அறிவித்திருக்கிறார். ராஜினமா செய்த முதலமைச்சர் ஆலோசனை கூறியபடி சட்டசபைக்குழு கலைத்து இடைக்கால தேர்தல் நடத்த வேண்டியது அவசியமில்லையென்று கவர்னர் திரு கே. சி. ரெட்டி குறிப்பிட்டிருக்கிறார்.

ற்து.

## இளைஞர் வானொலிநிலையம்

புதுடில்லி, மார்ச் 22

இந்தியாவில் இளைஞர் வானொலி நிலையம்ஒன்று நிறுவப்படவிருக்கின்றது. இந்த ஒலிபரப்பில் இளைஞர்களின் மேம்பாட்டுக்கான நிகழ்ச்சிகள் இடம்பெறும். இவைகளில் பாதி இளைஞர்களாலும் பாதி இளைஞர்களுக்காகவும் நிகழ்த்தப்படும்.

தது.

மேலும் இவர்கள் தெரிவித்ததாவது:-

சங்கத்தின் லாபத்தை பங்கீடு செய்வதில் கூட்டுறவு ஆணையாளருக்கு அதிகாரம் இருக்கப்படாது. சங்கப் பொதுக் கூட்டத்துக்கே அந்த அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அங்கத்தவர்களை நிறுத்தவோ அல்லது சபையைக் கலைக்கவோ ஆணையாளருக்கு உள்ள அதிகாரம் அகற்றப்பட்டு, பொதுக் கூட்ட மூலம் நம்பிக்கையில்லா தீர்மானத்தினல் நிறுத்தப்பட

## மொழி

புதுடில்லி மார்ச் 22

தென்னாட்டு மொழியொன்று உத்தரப்பிரதேசத்தில் கட்டாய பாடமாகப் போதிக்கப் படவிருக்கின்றது.

உத்தரபிரதேசத்தில் தென்னிந்தியாவில் வழங்கும் மொழியொன்று கட்டாய பாடமாகப் போதிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுவதாக உத்தரபிரதேச கல்வி அமைச்சர் ராஷ்ய சட்டசபையில் அறிவித்திருந்தார்,

காலஞ் சென்றவர் அப்போது வாய்க்கால் வழியாக தனது தோட்டத்திலிருந்து வருகையில் 3-ம் எதிரி '' அடே நல்லையா நில்லடா'' என சத்தமிட்டது எனக்கு கேட்டது. பின் 3-ம் எதிரி இறந்தவரை நோக்கி ஓடினார். 1-ம் 2-ம் 4-ம் எதிரிகள் 3-ம் எதிரியை பின்தொடர்ந்து ஓடினர். அந்த நேரம் 1-ம் எதிரி கையில் கொடுவாக்கத்தி வைத்திருந்தார். 2-ம் எதிரி கறுப்பு நிறமான இரும்போ அல்லது பொல்லோ போன்ற ஆயும் வைத்திருந்தார். 3-ம் 4-ம் எதிரிகள் கையில் ஆயுதம் எதுவும் இல்லை. எதிரிகள் காலஞ்சென்றவருக்கு அண்மையில் போனதும்

... ஆர். ஈ. தம்பிரத்தினம் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார் 3-ம் 4-ம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர்கள் ஆர் ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் ரி. தம்பிரத்தினம்வழக்கைநடாத்தினார். இவ்வருடம்பெப்பரவரி மாதம் 16-ம் திகதி ஏழாலை வடக்கு வாசியான தம்பிமுத்து நல்லையா என்பவரைக் கொலை செய்ததாக மகாலிங்கம், தங்கராசா, விசுவலிங்கம், கதிர்காமலிங்கம் ஆகிய நால்வருக்கு எதிராக சுன்னாகம் பொலிஸாரால் இவ்வழக்கு தொடரப்பட்டுள்ளது.

# 'ஆலய பூஜைமுறைகளைப் பேணிப் பாதுகாப்பேன்'

# கருணாநிதி வாக்குறுதி

## 'ஆலய சோஷலிஸம்' பற்றி ம. பொ. சி. வற்புறுத்தல்

சென்னை மார்ச். 22

தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்களில் வழிவழியாக இருந்துவரும் பூஜைமுறைகள் பேணிப் பாதுகாக்கப்படும்; இந்தவகையில் தி. மு. க. அரசு மற்ற எவருக்கும் பின்நிற்காது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இந்த உறுதி மொழியை தமிழ்நாடுகீழ் சட்டசபையில்தெரிவித்தார்.



சட்டசபையில் மாவட்டங்கள் நிர்வாக மான்ய கோரிக்கைமீது நடந்த விவாதத்துக்குப் பதிலளித்து அவர் பேசினார். அடுத்தாண்டிலிருந்து அறநிலையங்கள் பாதுகாப்புத் துறைக்கான தனி மான்யக் கோரிக்கை கொண்டுவரப்படும் என்றும் முதல்மந்திரி அறிவித்தார். இதுவரை மாவட்ட நிர்வாக இனத்தின்கீழ் அறநிலையத் துறை மானியம் அமைந்து வந்துள்ளது.


ம. பொ. சிவஞானம்பேசுகையில், அறநிலையத்துறை மானியத்தை தனிமானியமாக விவாதிப்பது அவசியமென்று குறிப்பிட்டார். ஆலயங்களிடையே பணக்கார கோயில்களின் உபரி நிதியை ஏழைக் கோயில்களுக்கு பயன்படுத்தி ஆலயங்களிடையே 'சோஷலிஷத்தை' ஏற்படுத்தலாமென்று யோசனை கூறினார். கோவில்களின் உபநிதியின் ஒரு பகுதியை ஹரிஜன மக்களின் நலனிற்கு ஒதுக்கவேண்டும். இதற்கு ஆலய தர்மகர்த்தாக்கள் மறுத்தால் அரசு ஆணைமூலம் இதை செயல்படுத்தவேண்டும். ஆலய தர்மகர்த்தாக்கள், நிர்வாகிகள் ஆலயவழிபாட்டில் நம்பிக்கையுண்டென்று உறுதிப்பாடு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் யோசனை கூறினார். டாக்டர் சி. பி. ராமசாமி குழுவின் சிபார்சுகள் கவனிக்கப்படவேண்டும் என்றார்.

திருப்பதி தேவஸ்தான போர்டில் தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தினார்.

முதலமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:-

அறநிலைய மானியம் அடுத்த ஆண்டு தனியாக விவாதிக்கப்படும் என்பதற்கு அற நிலை துறைக்குதனி மந்திரி நியமிக்கப்பட்டிருப்பது முன்னோடியாகும்.

தமிழ் நாட்டில்அறநிலைய



இலாகா பெரிய நிர்வாகம். ஆகவே அது தனியாக விவாதிக்கப்பட வேண்டியது நியாயமே.

பணக்காரக் கோயில்களின் உபரியை ஏழை கோயில்களுக்கு விநியோகிப்பதில் உள்ள சட்ட நுணுக்கங்களை ஆராய வேண்டியிருக்கிறது. 1968-69-ம் ஆண்டில் 60 ஏழைக் கோவில்களுக்கு ரூ. 4 லட்சம் அளவுக்குஅரசு உதவி செய்துள்ளது. தஞ்சை பிரகதீச்வரர் ஆலயமும் கங்கைகொண்ட சோழபுரம் ஆலயமும் மத்திய அரசு பாதுகாப்பில் உள்ளது. அதை மாநில அரசு எடுத்துக் கொள்வதற்கு சிலர் எதிர்ப்புத்தெரிவிக்கிறார்கள் இந்த இரு கோவில்களும் மாநில அரசு பாதுகாப்பில் வந்தால் அந்த கோவில்களின் பராமரிப்பு பாதிக்க மாட்டாது.

இந்தஇரு கோவில்களையும் மாநில அரசு எதற்காக எடுத்துக் கொள்ள வேண்டும்? இவை வரலாற்று சிறப்புவாய்ந்த இடங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

# கிழக்குப் பாகிஸ்தானிலும் புது கவர்னர் நியமனம்

## அப்துல் முனிம்கான் பதவிநீக்கம்

கராச்சி, மார்ச் 22

**கிழக்குப் பாகிஸ்தானில் கவர்னர் அப்துல் முனிம்கானுக்கு பதில் டாக்டர் எம்.எம். ஹுதா என்பவரை அதிபர் அயூப்கான் புதிதாக நியமித்துள்ளார்.**

அப்துல் முனிம்கானுக்கு நான்குமாதம் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இவர் அயூப்கானுக்கு மிகவும் விசுவாசமானவராக இருந்து வந்துள்ளார். ஆனல் கிழக்கு பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகளின் போராட்டங்களை நசுக்குவதற்கு இவர் பெரிதும் காரணமாகவிருந்ததாக எதிர்க்கட்சியினர் இவர்மீது ஆத்திரம் கொண்டிருந்தனர். அதிகாரத்தை இவர் தவறாகப் பிரயோகித்தாரென்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டி வந்தனர்.

அப்துல் முனிம்கானை பதவியிலிருந்து நீக்கியதன் மூலம் எதிர்க்கட்சியினரின் கோரிக்கைகளில் மேலும் ஒன்றை அயூப்கான் நிறைவேற்றியிருக்கிறார்.

புதிய கவர்னராக நியமனம் பெற்றிருக்கும் டாக்டர் ஹுதா ஒரு பொருளாதார அறிஞர். பதவியிலிருந்து விலகும் கிழக்குப் பாகிஸ்தான் சட்ட மந்திரி சபையில் இவர் நிதிமந்திரியாகவும் இருந்தார். டாக்டர் ஹுதா இன்று கிழக்குப் பாகிஸ்தானுக்குப் போய் தமது பதவியை ஏற்றுக் கொள்வார்.

கிழக்குப் பாகிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதுதான் தமது முதல் கடமையாக இருக்கும் என்று டாக்டர் ஹுதா இன்று அறிவித்திருக்கிறார்.

புதிய அரசியல் அமைப்பொன்றை பாகிஸ்தானில் உருவாக்க அயூப்கான் முயற்சிகள் மேற்கொண்டு வரும் அதே வேளையில் குழப்பங்களும் அராஜகமும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அமைதி கெட்டுப் போய் இருக்கும் நிலையை மாற்றி, மீண்டும் மாமூல் நிலைமையை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கும்படி பலரும் கோரிக்கைகள் விடுத்திருக்கிறார்கள்.

கடந்த இரண்டு வாரங்களில் டாக்காவில் மட்டும் கலவரங்களில்40 பேர்வரை பலியாகியிருக்கிறார்களாம்.

கிழக்குப் பாகிஸ்தானில் வன்செயல்களை தாம்தூண்டிவிடவில்லையென்று கிழக்குப் பாகிஸ்தான் பீகிங் சார்பு அவாமிக் கட்சியின் தலைவர் மௌலானா பாஷானி அறிவித்திருக்கிறார், தமது பேச்சுக்களை பத்திரிகைகள் திரித்துப்பிரசுரித்திருப்பதாக அவர் கூறியிருக்கிறார்.


ரவி என்றால் ... ... "சரி"



ரவி பிரஷ்களுள் நிலையான பெயர்.

உறுதியற்ற சிலிர்க்கும் முடிகள்
சுவர்களைக் களங்கப் படுத்தும் கோடுகள்
திந்தையை விணடித்தல்
இவை ரவி பிரஷ்களில் இல்லை.

ரவி பிரஷ் வாங்கும் போது நீங்கள் பூரண நம்பிக்கை அடையலாம். காரணம் ரவி திந்தை பிரஷுகள் இறக்குமதி செய்யப்பட்ட சுத்தமான முடிகளைக் கொண்டு செய்து அவற்றின் தரமும் நீண்ட சேவையும் உறுதிப்படுத்தும் விதம் பரிசோதிக்கப் படுகின்றன.

நீங்கள் அடுத்த முறை திந்தை பிரஷ்கள் வாங்கும் போது பிடியில் ரவி என்ற பெயர் இருக்கிறதா எனப்பார்த்து வாங்குங்கள்.
அதுவே தரத்தின் உத்தரவாதம்

சகல தேவைக்கும் ஒரு ரவி பிரஷ் உண்டு.

இவற்றின் வகைகளைக் காண்பிக்க உங்கள் வியாபாரியைக் கேளுங்கள்

ரவி இண்டஸ்ரீஸ் லிமிடெட்

RI-2-68-MASTERS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உண்மைக்கு மாறுனது சாஸ்திரத்தின் பொருளாகாது. சத்தியம் என்றால் என்ன என்று விதண்டாவாதம்செய்பவனுக்கு நாம்ஒன்றும்சொல்ல இயலாது. சொல்லுவதில் பயனில்லை. அப்பேர்ப்பட்டவன் சாஸ்திரங்களில் ஓர் அர்த்தமும் காண மாட்டான்.

-மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், இலக வருஷம் மாசிமாதம் 10-ந்திகதி
(23 - 3 - 69)


## உண்மையான அஞ்சலி

காலஞ் சென்ற தேச பிதாவான டி. எஸ். சேனநாயகாவின் 17-வது சிரார்த்த தினத்திலே, தமிழர் உள்ளிட்டு எல்லாச் சாதியினரும், சமயத்தவரும், கட்சியினரும் வேற்றுமையின்றி நன்றியுடன் அஞ்சலி செலுத்தியுள்ளனர். இதிலிருந்து அவரது பெருமையையும், நாட்டின் விடுதலைக்கும் ஒற்றுமைக்கும் அவர் செய்துள்ள பெரிய தியாக சேவையையும் உணரமுடியும்.

நாநூறு ஆண்டுகளுக்கு மேல் அந்நியருக்கு அடிமைப்பட்டு, சொல்லொணுத கஷ்ட நஷ்டங்களையும் அனுபவித்த இலங்கைப் பொது மக்களுக்கு எதிர்பாராத முறையில் ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல், அரசியல் விமோசனம் கிடைக்க முடிந்ததெனில் அதற்கு டி. எஸ். அவர்களின் அசாதாரணமான அரசியல் ஞானமும் திறமையும் பெரிதும் காரணமாகும். இளம் வயதிலிருந்தே தேசிய விமோசனத்துக்காக தொண்டு செய்த பல பெரிய தலைவர்களில் அவர் ஒருவர். 1915-ம் வருஷத்திலே இராணுவ கொடுங்கோல் நடந்த போது பிரிட்டிஷ் அரசாங்கம் அவரையும் அவரது சகோதரர்களையும் சிறைப்படுத்தியது. அவரை எந்த நிமிஷமும் சுட்டுக் கொல்லவும் கூடும் என்றும் அஞ்சப்பட்டது. நாட்டுக்காக தமது உயிரையே அர்ப்பணம் செய்யத் தயாராக இருந்த மாபெரும் தலைவரென்பதை மறப்பதற்கில்லை.

தமிழர்களிடத்திலே அவருக்கு விசேஷ மதிப்பும் நம்பிக்கையுமிருந்தது குறிப்பிடத்தக்கது. சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணுசலம் சேர். டபிள்யூ. துரைசாமி, திரு. கே. பாலசிங்கம் முதலிய பல தமிழ்த் தலைவர்களுடன் சேர்ந்து உழைக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். சுதந்திரம் ...

... வர்களிருந்தனர். ஆனால் இப்போது அவரது புதல்வரின் மந்திரி சபையிலே ஒரு தமிழர் கூட இல்லை. மேலும் தமிழும், சிங்களமும், தேசிய மொழியாக இருக்க வேண்டுமென்றும் தேசிய ஒற்றுமைக்கு அது மிக அவசியமென்றும் அவர் வற்புறுத்தியின் பற்றினர். அந்த ஏற்பாட்டையும், அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்கள் குலைத்ததால், நாட்டின் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்துக்கும் எவ்வளவு நஷ்டமென்பதை விளக்கத்தேவையில்லை.

பல சமூகங்களுக்கும் இடையே சமரசமேற்படுத்தியதுடன் நில்லாமல் அவர்எல்லாச் சமயத்தவர்களுக்கும் நீதி வழங்கினர். அப்பேர்ப்பட்ட ஒரு பெருந்தலைவருக்கு தமிழர் உள்ளிட்டு, எல்லா சமூகத்தவரும், சமயத்தவரும் நன்றியுடன் அஞ்சலி செலுத்துவதுடன் நாட்டிலுள்ள பல சமூகங்களுக்கிடையிலும் சமரசத்தையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்த கூடுமான எல்லா முயற்சிகளையும்செய்யவேண்டியது தேசாபிமானிகளின் கடமையாகும். அப்பொழுதுதான் நம் நாடு அமைதியாகவும் சுபீட்சமாகவும் முன்னேற முடியும். தமிழ் பேசும் மக்களும் சமூக சமரசம், ஒத்துழைப்பு என்ற அக் கொள்கைகளை இச் சோதனை மிக்க காலத்திலும் பின்பற்றிவருவதும் நன்மையே விளைவிக்கும்.

ஒரு முக்கிய சந்தர்ப்பத்திலே திரு. டி. எஸ். சேனநாயகா கூறிய அர்த்த புஷ்டியுள்ள பொன்மொழியொன்றை இச்சமயம் நினைவுபடுத்துவதுபயனுள்ளதாகும். "தமிழரும் சிங்களவரும் எவ்வளவோ தவறுகள் செய்துள்ளனர். ஆனல் அவற்றைப்பற்றியே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பது விவேகமல்ல. அத் தவறுகளை பரஸ்பரம் மறந்து ...

### ஆட்சிமன்றத்திலே

நமது நிருபர்
பெரி. சுந்தரலிங்கம்

# காலி இடங்களை தாமே உருவாக்கி வேலை கொடுக்கும் அமைச்சர்

# தொம்பே எம். பி. குதர்க்கம்

'மின்சார போரிடு, மசோதா மீதான விவாதம் நேற்று தொடர்ந்து நடைபெற்றது அமைச்சர்கள் எதிர்பாராதவிதத்தில்வெகு சீக்கிரமாக முடிந்து விட்டதால் நிகழ்ச்சி நிரலில் அதற்கு அடுத்து இடம் பெற்றிருந்த விஷயங்கள் விவாதத்திற் கெடுத்துக் கொள்ளப்பட்டன,

ஆனல் தொழில் அமைச்சரின் நல்ல காலமோ கெட்ட காலமோ தெரியவில்லை. அடுத்து நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றிருந்த பல விஷயங்களை பிரேரிக்க வேண்டிய அமைச்சர்கள் அச்சமயம் சபையில் பிரசன்னமாயிராத படியால் நிகழ்ச்சி நிரலில் 29-வது இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்த தொழில் அமைச்சரின் உபமான்யப் பிரேரணையொன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தொழில் இலாகா தலைமை நிலையத்திற்கான கட்டிடமொன்றைக் கட்ட 28 லட்ச ரூபாய் பணம் கேட்டு உபமான்யப் பிரேரணையை பிரேரித்த தொழில் அமைச்சர் ஜனுப் எம். எச். முகமது திடீரென இந்த விஷயம் விவாதத்திற்கு வந்துவிட்டதால் இரத்தினச் சுருக்கமாக தலைமைநிலையக் கட்டிடத்திற்கான அவசியத்தை வலியுறுத்திவிட்டு அமர்ந்தார்.

அமைச்சர்கள் பணம் கேட்டு உபமான்யப் பிரேரணைகளை கொண்டுவரும் போது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நிதிநிலை அறிக்கை விவநதத்தின் போது விவாதிக்கப்படாது தப்பிவிட்ட விஷயங்கள் பற்றிப் பொதுவாகவும் அமைச்சர்களின் இலாக்காக்களில் நிலவும் ஊழல்களை - குறைபாடுகளை குறிப்பாகவும் அலசி ஆராய்வது சம்பிரதாயபூர்வமாக நடந்து வரும் செயல்தான்.

இன்றும் அந்தச் சம்பிரதாயத்தை நழுவ விட்டுவிடாமல் தொழில் அமைச்சரின் கீழுள்ள ஊழியர் சேமலாபநிதி அலுவலகம் வேலைதேடித்தரும் அலுவலகம், கைத்தொழில் நீதிமன்றங்கள் போன்ற இன்னேரன்ன பிரிவுகளில் உள்ள குறைபாடுகளை சுட்டிக் காட்டி திருவாளர்கள் பிரி ...

தொழில் அமைச்சு கட்டிக்கொண்டிருக்கும் இந்தத் தொழில் அமைச்சு தலைமைக் காரியாலயக் கட்டிடம் ஆரம்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக் காலத்தில் திட்டமிடப் பட்டதாகும். அப்பொழுது 42 லட்சரூபாய் செலவில் நிர்மானிக்கப்படுவதாக இருந்தது இந்தத் தலைமைக்காரியாலயக் கட்டிடம். அப்புறம் என்ன காரணத்தினலோ 49 லட்ச ரூபாய் செலவாகும் என்று கணிக்கப்பட்டு அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டு கட்டிடவேலைகள் ஆரம்பமாயின.

ஆனல்இப்பொழுது ஆரம்பத்தில் கட்டிடத்திற்கான செலவுகளை கணித்த விதத்தில் மாபெரும் தவறுகள் ஏற்பட்டிருப்பதால் செலவினங்கள் ஒருகோடி ரூபாய் ஆகுமென்றும் எனவே ஏற்கனவே 42 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு விட்ட போதிலும் அடுத்தஆண்டு நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரையிலான செலவுகளுக்கு 28 லட்சம் ரூபாய் கோரி உபமான்யப் பிரேரணையொன்றை சமர்ப்பித்திருந்தனர் ஆட்சியாளர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களான 'பொடிபுத்தா' முதியான்சே தென்னக்கோன், கம்யூனிஸ்ட் கட்சி எம். பி. பெர்ஸி விக்கிரமசிங்கா ஆகியோர், நாட்டில் இன்று நிலவும் இக்கட்டான பொருளாதார நிலைமையில் ஒருகோடி ரூபாய் செலவில் இப்படித் தலைமைக் காரியாலயம் நிறுவுவது அத்தியாவசியமில்லை என்ற அடிப்படையில், கட்டிட வேலைகளை உடனடியாக நிறுத்தி, கிராமப்புறங்களிலே பாடசாலைக் கட்டிடங்களைத் திருத்தவும், பாதைகளைச் செப்பனிடவும் இந்தப் பணத்தை உபயோகப் படுத்தலாம் என வலியுறுத்தினர்.

ஆனல் அடுத்து, முன்னைநாள் நிதியமைச்சர்கள் இரண்டு பேர் திருவாளர்கள் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும்- டாக்டர் என். எம். பெரேராவும் எழுந்து தொழில் அமைச் ...

... டனர்.

தொம்பே பிரதிநிதி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினல் போல நாசூக்காக எதையும் எடுத்துச் சொல்லும் நாவன்மை பெற்றவர்! இன்றும் உபமான்யப் பிரேரணையைச் சாட்டாக வைத்துக் கொண்டு, தேசியமய சேவை அமைச்சர் (திரு. வி. ஏ. சுகததாசா) இ. போ. ச. விலும், அவர் கீழ் இயங்கும் இதர கூட்டுத்தாபனங்களிலும் அவர்களது ஆதரவாளர்களுக்கு எப்படியெல்லாமே உத்தியோகம் பெற்றுக் கொடுக்கிறர், காலியிடங்களை அவரே உருவாக்கி, அவரே நிரப்பியும் விடுகிறர் என்று சொல்லிவிட்டு, "நான் இதனைச் சொல்லுவதைக் கேட்டு பிரதம மந்திரியவர்கள் எங்களைத் தாக்க முன்வேக்கி வராதிருந்தால்" நல்லது என்றும் பழைய சம்பவங்களை நினைவு படுத்தினர்.

திரு. பீலிக்ஸ் தொடர்ந்து பேசுகையில், தொழில் அமைச்சு 'மாணிக்கங்கள்' நிறைந்த இடமென்றும், அந்த 'மாணிக்கங்களை' யெல்லாம் ஓரிடத்தில் ஒன்று சேர்க்கும் முன், அமைச்சர் தொழில் இலாகாவையும், சீர்படுத்தி, தொழிலாளர் உரிமைகளைக் காக்கும் சட்டங்களை அமுல் நடத்துகின்றவர்கள் சரியானபடி நடந்து கொள்கிறர்களா என்பதையும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

டாக்டர் என். எம். பெரேராவோ, கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டு, ஒவ்வொரு சதமாகக் கணக்குப் பார்க்கும் பேர்வழி.,

49 லட்ச ரூபாயில் கட்டப்பட விருந்த கட்டிடம் 1 கோடிரூபாயில்கட்டிவைக்கப்படவிருப்பது ஏன்? என்ற கேள்வியை எழுப்பி 49 லட்சம் ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்க ஆட்சி மன்றம் அனுமதி யளித்திருக்கும்போது நிதியமைச்சர் 1 கோடி ரூபாய் செலவில் கட்டிடம் கட்ட எப்படி அனுபதி அளி ...

... ங்கம் போகும் போக்கு என்னவோ சரியில்லை என்று கவலைப்பட்ட என். எம். 'தலைக்கு மேலே தண்ணீர் போன பின்பு, சாண்போனல் என்ன? முழம் போனல் என்ன?" என்ற எண்ணத்தில்தான், நிதியமைச்சர் இப்படியெல்லாம் தன்னிச்சையாக நிதி ஒதுகீடுகளைச் செய்திருக்கிறர் போலும் என்றுசொல்லி அமர்ந்தார்.

அமைச்சர் முகமது பதிலளிக்குமபோது தொழில் இலாகா அண்மைக் காலத்தில் சில பல குறைபாடுகள் ஊழல்கள் இருந்தது உண்மைதான் என்பதை ஏற்றுக்கொண்டுஅவற்றைக் ரகளையவும் அவற்றிற்குக் காரணமான உத்தியோகத்தர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறி தொழில் அமைச்சின்கீழ் உள்ள உத்தியோகத்தர்கள் அதிகாரிகள் யாரேனும் ஒழுக்கக்குறைவாக நடந்து கொண்டால் அதனைத்தான் கவனத்திற்குக் கொண்டு வரும்படி உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து கண்டிய புனருத்தாரண சபைக்காக 10 லட்ச ரூபாய் கோரும் உப மான்யப் பிரேரணையைஉள்நாட்டு அமைச்சர் டாக்டர் தஹநாயகா கொண்டுவந்தார் அதுவும் நிறைவேற்றப்பட்டது

ஒத்திவைப்புப் பிரேரணையின்போது இந்த நாட்டின் பிரஜைகள் அல்லாதோருக்கும் பீடி இலைக் கோட்டா வழங்கப்படுவது முறையல்ல என்று கூறி இப்போது இலங்கையரல்லாதோருக்கு வழங்கப்பட்டுவரும் பீடி இலைக் கோட்டாக்களை உடனடியாக நிறுத்த அல்லதுகுறைக்கவேண்டும் என்று டாகடர் என். எம். பெரரா கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த டாக்டர் தஹநாயகா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் இலங்கையரல்லாத 31 நபர்களுக்குபீடி இலைக் கோட்டா வழங்கப் பட்டதென்றும் தேசிய அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் இலங்கையரல்லாதோர் ஒருவருக்கேனும் பீடி இலைக் கோட்டா வழங்கப்படவில்லைஎன்றும்குறிப்பிட்டார்

## ஐயாறன் எழுதுவது

உடும்பராயிலிருந்து திரு. க. குருநாதன் என்ற ஓர் அன்பர் எழுதுவதாவது:-

'ஈழநாடு' வாரமலரில் வாரந்தோறும் வெளியாகின்ற கம்பர் கவி விருந்தாகிய கருத்தோவியத்தைப் படித்து சுவைக்கின்ற பலரில் யானும் ஒருவன் கடந்த வாரத் தொடர்ச்சி ஏனேஇல்லை. தசரதச் சக்கரவத்தியிடம் விஸ்வாமித்திர மகரிஷி தான் நிறைவேற்றவிருக்கும் யாகத்துக்கு ஸ்ரீ ராமரைப் பாதுகாப்புக்குத் தந்துதவுமாறு கேட்கும் கட்டத்தில்நிறுத்தியது, தற்பொழுதைய தொடர்கதைகளின் பாணியை நினைவுறுத்திற்று!

சிலசமயம் அதன் ஆசிரியராகிய இராமாயண இரசிகமணி ஸ்ரீமத் சுவாமி நாததம்பிரான்சுவாமிகள்தற்பொழுது தமிழகத்திலே இதே போன்ற இன்னொரு கைங்கரியத்தில் ஈடுபட்டிருப்பதாலோ என்னவோ இவ்விதம் நடந்திருக்கக்கூடும். எப்படியும் அடுத்தடுத்த இதழ்களில் இக்கவி விருந்து தொடர்ச்சியாக வெளிவருமென்றே நம்புகிறேன்.

அத்துடன் சில சில இதழ்களில் அச்சுப்பிழைகளும் ஆங்காங்கு தென்படாமலுமில்லை. இக்குறையையும் கூடிய விரைவில் நீக்க முயற்சிப்பின் நன்ருக இருக்கும். எப்படியும் தங்கள் இலக்கியப்பணி குறித்து வாசகர்களாகிய நாங்களும் ஆஸ்திகப் பெருமக்களும் மிகவும் கடப்பாடுடையவர்களாகின்றோம். தங்களுடைய லட்சியம் மேன்மேலும் கைகூடுவதாக. நன்றி.

0 0 0

அன்பர் அவர்களின் கடிதத்துக்கு எங்கள் நன்றி. ஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் தமிழகம் சென்றதால், இத் தொடர்ச்சி ஒருவாரம் தடைபட்டதற்காக வருந்துகிறோம். ஆனல் அங்கிருந்தே அவர் கருத்தோவியத்தைத் தொடர்ந்து எழுதி அனுப்பியுள்ளதால், அடுத்தவாரம் வாரப்பதிப்பில் அதுவெளியாகிறது

'ஈழநாடு' பத்தாவது ஆண்டுவிழா சம்பந்தமான தொடர்கதை, சிறுகதை, முதலிய போட்டிகளுக்கு நூற்றுக்கணக்கான ஈழத்து எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறர்கள். அவற்றில் பல முதல்தரமான இலக்கியமாகவுள்ளனவென்பதை பெருமையுடனும் தெரிவித்துக்கொள்ளுகிறேம். பரிசு பெறும் தொடர் கதைகளையும், சிறுகதைகளையும், கவிதைகளையும் நமது வாரமலரில் பிரசுரிப்பதுடன், பல புதிய அம்சங்களுடன் 'ஈழநாடு' வாரமலர் சிறந்து விளங்குமென்பதையும் வாசக அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன்அறியத்தருகிறேம்.

0 0 0

புதிய சௌமிய வருஷத்தின் வாக்கிய பஞ்சாங்கம் நேற்றுக்கிடைத்தது. யாழ்ப்பாணம் கொக்குவிலிருந்து வரும் புகழ்பெற்ற இந்த பஞ்சாங்கத்துக்கு தமிழகத்திலும் அதிக கிராக்கியாம். ஓர் இந்திய அன்பர் இப்பஞ்சாங்கத்தை வாங்க சிலநாட்களுக்குமுன் மிக ஆவலுடன் வந்திருந்தார். செலாவணி பர்மிட் முதலிய தடைகளால் அங்கு இது கிடைப்பதில்லையாம். பஞ்சாங்கங்களுக்கும் புத்தகங்களுக்கும் உள்ள தடைகளை நீக்கி, இவையாவருக்கும் தாராளமாகக் கிடைக்கும்படிசெய்ய முடியாதா? இதுவும் மனிதரின் அடிப்படை உரிமைகளில் ஒன்ருகுமாதலால், இதற்குத்தடை போடுவது, மனிதருக்குச் செய்யும் பெரியகுற்றமாகும்.

0 0 0

புதுவருஷம் எப்படி இருக்கப்போகிறதென்று ஆவலுடன் புரட்டிப்பார்த்தேன். "பிறக்கும் புதுவருடத்தில் உலக மக்கள் யாவரும் ஏராளமான பயிர், பொருள், மழை இவைகளுடன் விளங்குபவராய், பகைமை நீங்கப்பெற்றவர்களாய் இருப்பார்கள். பூமி பல நன்மைகளை உறுதியாகத்தரும்..." என்று எழுதியுள்ளதைப் பார்க்க ஆறுதலாக இருந்தது.

0 0 0

அம்மை பயக்கும் அமிர்து கண்டாய் அந்தேன் தெளி கண்டாய் ஆக்கஞ் செய்திட்(டு), இம்மை பயக்கும் இறைவன் கண்டாய் என்னெஞ்சே உன்னில் இனியான் கண்டாய், மெய்ம்மையே ஞான விளக்குக் கண்டாய், வெண்காடன் கண்டாய் வினைகள்போக, மம்மர் அறுக்கும் மருந்து கண்டாய், மறைக்காட்டுறையும் மணாளர் தாமே.

—அப்பர் அடிகள்.

## வழக்கறிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கு விசேஷ மதிப்பும் நம்பிக்கையுமிருந்தது குறிப்பிடத்தக்கது. சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணுசலம் சேர். டபிள்யூ. துரைசாமி, திரு. கே. பாலசிங்கம் முதலிய பல தமிழ்த் தலைவர்களுடன் சேர்ந்து உழைக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். சுதந்திரம் பெறு முன்பாக, அத்தலைவர்களுடன் மிக நெருங்கிய தொடர்பு அவருக்கிருந்தது. அவர் சிறைக்குச் செல்லுகையில் திரு. எஸ். சண்முகம் என்ற தமிழ் வர்த்தகரொருவரையே தமது ''அட்டார்னி'' யாக நியமித்தாராம். தமது விவாகத்தின் போது ஒரு தமிழரை தமது தோழர்களில் ஒருவராக வைத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது,

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை அவர் அமைக்கையில் அவரது மந்திரி சபையில் திருவாளர்கள் ஸி. சுந்தரலிங்கம், ஸி. சிற்றம்பலம், ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகிய மூன்று தமிழ்த் தலை

...யொன்றை இச்சமயம் நினைவுபடுத்துவதுபயனுள்ளதாகும். ''தமிழரும் சிங்களவரும் எவ்வளவோ தவறுகள் செய்துள்ளனர். ஆனுல் அவற்றைப்பற்றியே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பது விவேகமல்ல. அத்தவறுகளை பரஸ்பரம் மறந்து அன்புடனும் நல்லெண்ணத்துடனும் எதிர்காலத்தில் ஒத்துழைப்பதே சரியானதும் புத்தியானதுமான வழி'' என்பதே அது. மகாத்மாகாந்தி போன்ற பெருந்தலைவர்களும் காட்டியவழி இதுவேயாகும். அவர் காட்டிய இவ்வழியை, அவரது திறமைமிக்க புதல்வரும் இப்போது ஆட்சிப்பொறுப்பை வகிப்பவருமான திரு. டட்லி சேனநாயகா உள்ளிட்டு பலரும் பின்பற்றுவதே அப்பெருந்தலைவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

## வெங்காயம் ஓர் அருமருந்து

'இருதய நாளங்களில் இரத்தம் உறைந்து ஏற்படும் கோரமானமாரடைப்பு வியாதிகளைபோக்குடிக்கும் அதிசய ஆற்றல் வெங்காயத்திற்கு உண்டென்றும் இதிலிருந்து சக்தி வாய்ந்த மருந்து தயாரிக்க முடியுமென்றும் பிரிட்டிஷ் வைத்திய விஞ்ஞானிகள்குழு கண்டு பிடித்து நம்பிக்கை தெரிவித்திருக்கிறது. இது வெறும் 'வெங்காயப் பேச்சல்ல' என்பதுநமது நம்பிக்கை. எதற்கெடுத்தாலும்'வெங்காயம், வெங்காயம்' என்று கூறும் தமிழ் நாட்டுப் பெரியார் ஈ.வெ.ரா. 90வயதிலும் நோய்நொடியின்றித் திடகாத்திரமாக இருப்பதற்கு அவர் வெங்காயம் அதிகமாகச்சாப்பிடுவதோ, அல்லது 'வெங்காயம்' என்று அடிக்கடி உச்சரிப்பதோதான் காரணமோ தெரியவில்லை.

எது எப்படியிருந்தாலும் நமது யாழ்ப்பாண விவசாயிகளின் புகழ்இனி இங்கிலாந்தில் மட்டுமல்ல அகில உலகிலுமே அடிபடக் கூடும். வெளிநாடுகளிலும் வெங்காயத்தின் மதிப்பு அதிகரிப்பதால் ஆனையிறவுத் தடை அதிகரிக்கவும் கூடும்.

வெங்காயம், மிளகாய் போன்ற உப உணவுப் பொருள்களுக்காகபெருந்தொகையான பணம் வெளிநாடுசெல்வதாகவும் இதைத்தடுக்க விவசாயிகள் முன்வந்து ஒத்துழைப்பளிக்க வேண்டுமென்றும் பிரதமர்வேண்டுகோள் விடுத்தபோது அதற்கு உடனடியாகச் செவிசாய்த்து உப உணவுப்பொருள் உற்பத்தியை அதிகரிப்பதில் ஓரளவு வெற்றியும் கண்டனர். பிரதமரும் அமைச்சர்களும் பாராட்டினர். வெள்ளம் ஏற்பட்டு வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டபோது விவசாயிகள் அவலக்குரல் எழுப்பியதும் அரசாங்கம் அசமந்தமாக இருந்தது. பின்னர் 'அப்படி இப்படி' என்று ஏதோ கொஞ்சம் 'நிவாரணம்' வழங்கியது. காசுப்பயிர் என்றழைக்கப்படும் அதிக வருமானம் தரும் புகையிலைச் செய்கையை விடுத்து வெங்காயம் செய்தவிவசாயிகள் அதனுல்நஷ்டம் அடைந்ததை தொடர்ந்து பின்னர் அதிக அக்கறை செலுத்தவில்லை. விவசாயிகளுக்குப் போதிய உதவியும் ஊக்கமும் அளித்தால் வெளிநாட்டிலிருந்து வெங்காயத்தை எதிர்பார்க்காமல் நமதுதேவையைப் பூர்த்திசெய்யக்கூடியதாக மமல்ல இப்பொழுது இங்கிலாந்தில்இருதயநோய்க்கு அருமருந்தாக வெங்காயம் பயன்படும் எனக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், வெளிநாட்டுப்பணத்தை இங்கு பெருமளவில் வருமானமாகப்பெறுவதற்கும் வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதற்கும் நல்ல வாய்ப்பிருக்கிறது.

...தாயத்தை நழுவ விட்டுவிடாமல் தொழில் அமைச்சரின் கீழுள்ள ஊழியர் சேமலாபநிதி அலுவலகம் வேலைதேடித்தரும் அலுவலகம், கைத்தொழில் நீதிமன்றங்கள் போன்ற இன்னேரன்ன பிரிவுகளில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி திருவாளர்கள் பிரின்ஸ் குணசேகரா, எச்.எம் நவரட்னே, பெர்ஞட் சொய்சா பேர்ஸி விக்கிரமசிங்க ஆகியோர் பேசினர்.

...வேண்டும் இந்தப் பணத்தை உபயோகப் படுத்தலாம் என வலியுறுத்தினர்.

ஆனுல் அடுத்து, முன்னைநாள் நிதியமைச்சர்கள் இரண்டு பேர் திருவாளர்கள் டீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும்- டாக்டர் என். எம். பெரேராவும் எழுந்து தொழில் அமைச்சர் மீது சரமாரியான கண்டனச் சொற்களையும் கேள்விப் பிரச்னைகளையும் தொடுக்க ஆரம்பித்து விட்...

1 கோடிரூபாயில்கட்டிவைக்கப்படவிருப்பது ஏன்? என்ற கேள்வியை எழுப்பி 49 லட்சம் ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்க ஆட்சிமன்றம் அனுமதி யளித்திருக்கும்போது நிதியமைச்சர் 1 கோடி ரூபாய் செலவில் கட்டிடம் கட்ட எப்படி அனுபதி அளித்தார் என்று கேட்டு நிதியமைச்சரையும் வம்புக்கிழுத்தார் டாக்டர் என். எம்.

கடைசியாக இந்த அரசா...

...காலத்தில்தான் இலங்கையரல்லாத 31 நபர்களுக்குப்பிடி இலைக் கோட்டா வழங்கப்பட்டதென்றும் தேசிய அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் இலங்கையரல்லாதோர் ஒருவருக்கேனும் பீடி இலைக் கோட்டா வழங்கப்படவில்லைஎன்றும்குறிப்பிட்டார் (அடுத்த கூட்டம் 23-ம் திகதி10 மணிக்கு)

# எண்பதாவது பிறந்தநாள் கொண்டாடும்
# நல்ல தமிழ் தொண்டர்
# முதலியார் முத்துத்தம்பி

**இன்று (23-3-69) முதலியார் செ.முத்துத்தம்பி அவர்களுடைய 80-வது பிறந்ததினமாகையால் இககட்டுரை இங்கு பிரசுரமாகிறது**

''உலகத்தில் வாழ்கின்றவர்கள் தமக்காக மட்டுமல்லாது உலகத்துக்காகவும் வாழவேண்டும்'' என்பது நல்லறிஞர்களின் கருத்து. இந்தக் கருத்துக்காக வாழ்கின்றவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே உள்ளது. ஆம்; இந்த எண்ணிக்கை குறைந்தவர்களினுற்றுன் தான் பிறந்த மண்ணுக்குச் சேவை செய்ய முடியும். இப்படி எண்ணிக்கை குறைந்த வரிசையில் உயரிய சேவை உள்ளங்கொண்டவர்களில் ஒருவராக யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றவர் முதலியார் செ. முத்துத்தம்பி.

யாழ்ப்பாணத்தில் பல விழாக்கள் நடைபெறுகின்றன. அரசியல், கலை, சமயம் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர்களால் இவ்விழாக்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த விழாக்களில் அவ்வத்துறைகளில் தேர்ச்சியும் ஊக்கமும் உடையவர்கள் கலந்து கொள்ளுவர். ஆனுல் முதலியார் முத்துத்தம்பி அவர்கள் எவ்விழாக்களிலும் கலந்துகொள்ளுகின்ற பெற்றிமை உடையவர். அரசியலிலும் கலைகளிலும், சமயத்திலும் ஈடுபாடுடைய இவர் எத்துறையிலும் மிகவும் பொருத்தமாகவும் கொடுக்கப்பட்ட விடயத்தை ஒட்டி எவரையும் கவரக்கூடிய பேச்சாளருகவும், பேசியதற்கேற்ப நடைமுறையில் அவற்றைக் கடைப்பிடிக்கின்ற பண்பும் உடையவராக மிளிர்கின்றுர்.

இவர் எழுதுவினைஞராக அரசாங்க சேவையில் சேர்ந்து, கச்சேரி முதலியார் பதவியை வகித்து ஓய்வு பெற்றவர். இப்பதவியில் நின்றும் இவர் தாமாகவே ஓய்வு பெறுவதற்கு இவர் தாம் கொண்ட கொள்கையே அடிப்படையாக அமைந்தது.


1947-ம் ஆண்டளவில் நடைபெற்ற முதலாவது தேர்தலில் தாம் பங்கு கொண்ட அரசியற்கட்சியின் காரணமாக தேர்தல் காலத்தில் கிடைக்கக்கூடிய உயரிய பதவிகளைக் கூட நாடாது பதவியை துறந்தவர்.

1954-ம் ஆண்டின் இறுதியில் யாழ். மாநகரசபையின் 14-ம் வட்டார அங்கத்தவராகிய இவர் தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றின் காரணமாகவும், சமூக முன்னேற்றத்திலுள்ள அக்கறையினுலும் தனது பதவிக்காலத்தில் 100க்கு மேற்பட்ட பிரேரணைகளைக் கொண்டுவந்தார். அவற்றில் அநேகமானவை செயலுக்குப் பெற்றனவா? என்பது கேள்விக்குறியாகும். ஆயினும் இவர் தமது உற்சாகத்தை இழந்துவிடாது தனது நல்ல பிரேரணைகளுக்காக வாதாடி வந்திருக்கின்றுர். 1955—1958க்கு இடைப்பட்ட ஆக மூன்றுண்டுகள் தான் முனிசிபல் அங்கத்தவர் பதவியை வகித்துள்ளார்.

தமிழ்ப்பற்றும் சமய வளர்ச்சியில் அக்கறையும் மிக்க இவர் மேலும் தொடர்ந்து முனிசிபல் அங்கத்தவர் பதவியை விரும்பாமையினுல் அடுத்த முறை தேர்தலில் நின்றும் விலகினுர். ஆனுல் தனது கொள்கைக்கமைய நல்ல தமிழ்த் தொண்டனுக இன்றுவரை விளங்குகின்றுர்.

யாழ்ப்பாணத்தில் சமூக முன்னேற்றம் கருதி உழைக்கின்ற சங்கங்கள் பலவற்றில் அங்கத்தவராகவுள்ள இவர் தாம் முக்கியமாகப் பங்கு கொண்ட யாழ்ப்பாணம் சைவ அபிவிருத்திச் சங்கம், கொழும்பு நாவலர் நடைமுறை இயக்கம், இலங்கை கய்ரோகத் தடுப்பு நிவாரணச்சங்கம், யாழ்ப்பாணம் அந்தியகாலச் சங்கம் உட்பட பல்வேறுபட்ட சங்கங்களிலும் நல்ல தொண்டு புரிந்து வருகிருர்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் காலத்தில் பசுவதை செய்வதற்கு உடன்படாமை காரணமாக பிறந்த நாட்டைத் துறந்து வெளிநாடு சென்ற ஞானப்பிரகாச முனிவர், சைவம், தமிழ் தழைக்க அவதரித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், ஈழத் தேசிய விடுதலைவித்திட்ட சேர் பொன் இராமநாதன் ஆகிய பெரியார்களே நமக்கு வழிகாட்டிகளாக விளங்கவேண்டியவர்கள் என்ற நம்பிக்கை மிகவுடையவர். இம்மூவரைப்பற்றியும் அவ்வப்போது பத்திரிகைகளுக்கு எழுதியும், மேடைகளில் உரையாற்றியும் வருகின்ற இப்பெரியார் இவர்களைப் பற்றிய குறிப்புகளைச் சேக-



ரித்து வைத்துள்ளார். அவற்றையெல்லாம் திரட்டி நல்ல நூலாக்கவேண்டும்என்றதிட்டமுடையவர்.

1890-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியைச் சேர்ந்த பாவட்டங்காடு என்ற பகுதியில் சைவத்தைப் பேணும்உயர்மரபில் பூத்த செல்லப்பாதம்பதிகளின் கனிஷ்ட மைந்தனுகப் பிறந்தவர் திரு. முத்துத்தம்பி அக்காலத்தில் சிறந்த சுருட்டுத் தொழிற்சாலையை பெரும்முதலீட்டினுல் நிறுவியவர் இவர்தந்தை. தந்தையாருக்குப் பின்னர் இவரது சகோதரர்களான திருவாளர்கள் பொன்னம்பலம், சண்முகம் ஆகிய இருவரும் அதனை நிர்வகித்து வந்தனர். அவர்களது மறைவுக்குப்பின் அண்மைக்காலம் வரை திரு. முத்துத்தம்பியவர்களே அச் சுருட்டுத் தொழிற் சாலை நிர்வாகியாகியிருந்தார்.

இவர் ஆரம்பகல்வியை ஆனைப்பந்தியடி மெதடிஷ்த பாடசாலையிலே பெற்றுர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் உயர்படிப்புப் படித்த பின் அரசாங்க சேவையில் சேருவதற்கு முன்னர் பிரமஸ்ரீ கணேசையா அவர்கள் புன்னுலைக் கட்டுவனில் நடாத்திவந்த பாடசாலையில் ஆங்கிலம் தமிழ் போதிக்கும் ஆசிரியராகக் கடமை புரிந்துவந்தார். கணேசையா அமரத்துவம் பெறும்வரை அவருடன் தொடர்புற்றிருந்தபெருமை இவருக்குண்டு.

இவர் இப்போது செய்துவரும் சைவசமயத் தொண்டைப் பாராட்டி நல்லை திருஞானசம்பந்த மடாதிபதி சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் இவருக்கு ''அறநெறிக்காவலர்'' என்ற பட்டத்தை 1967-ம்ஆண்டில் வழங்கியுள்ளார்.

மேற்படி பட்டத்துக்கு பொருத்தமான வகையில் ஓய்வு நேரத்தையெல்லாம் சமய புராண நூல்களைப் படிப்பதிலும், சைவத் தொண்டு புரிவதிலும் பயன்படுத்திவரும் இப்பெரியாருக்கு இம்மாதம் 23-ம்திகதி எழுபத்தொன்பது வயது நிறைவுபெற 80 வது வயது ஆரம்பமாகின்றது. இவரது குலதெய்வமாக விளங்குபவர் யாழ்ப்பாணம் அத்தியடி விநாயகர் இந்த ஆலயத்துத் தர்மகத்தாவும் இவரே. விநாயகப்பெருமானின்கிருபாகடாட்சத்தினுல் இவர் மேலும் நற்பணிகள் செய்து நாட்டில் பல்லாண்டு வாழ யாமும் இறைவனை வாழ்த்துவோம்.

அன்பர்

...'ஈழநாடு' பத்தாவது ஆண்டுவிழா சம்பந்தமான தொடர்கதை, சிறுகதை, முதலிய போட்டிகளுக்கு நூற்றுக்கணக்கான ஈழத்து எழுத்தாளர்கள் எழுதியிருக்கிருர்கள். அவற்றில் பல

## வழக்கறிஞர் நடிக்குப் நாடகம்

பருத்தித்துறை, சனி

யாழ்ப்பாண நீதிமன்ற வழக்கறிஞர்கள் புத்தாண்டுத் தினத்தன்று நாடகம் ஒன்றை யாழ். திறந்த வெளியரங்கில் நடத்துவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. பிரபல வழக்கறிஞர் ஒருவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்த திரு. டி. கே. பகவதியிடம் ''இராஜ ராஜ சோழன்'' நாடகப் பிரதியொன்றைப் பெற்றுக் கொண்ட போதிலும், சமூக, நாடகமா அன்றி வரலாற்று நாடகமா என்பது பற்றி இன்னும் திட்டவட்டமாக முடிவு செய்யப்படவில்லையென வழக்கறிஞர் திரு. எம். சிற்றம்பலம் கூறுகிருர்.

...கண்டாய், வெண்காடன் கண்டாய் வினைகள்போக, மம்மர் அறுக்கும் மருந்து கண்டாய், மறைக்காட்டுறையும் மணாளர் தாமே.

—அப்பர் அடிகள்.

## ஆலய ..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே இரண்டையும் மாநில அரசிடம் கொடுத்தால் பூஜையும், பாதிக்கப்பட மாட்டாது. ஆலய பண்பாட்டு புகழும் பாதுகாக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

ஹரிஜனங்களை டிரஸ்டிகளாக்கக் கூடாது என்று அரசாங்க தடை எதுவுமில்லை.

திருப்பதி தேவஸ்தான போர்டில் தமிழக பிரதிநிதியை சேர்ப்பது எவ்வளவு தூரம் காரிய சாத்தியமானது என்பதை ஆந்திர மாநிலத்துடன் தொடர்பு கொண்டு நான் ஆராய்வேன்.

செங்கற்பட்டு கலெக்டருக்கு அதிகஅதிகாரம் வேண்டும் என் திரு விநாயகம் கேட்டார். கலெக்கடருக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கோருகிருரே தவிர மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கோரவில்லை. இதற்கும் அவர் குரல் எழுப்புவார் என நம்புகின்றேன்.

முதல்வர் பதிலளித்த பிறகு வெட்டுப் பிரேரணைகள் திரும்பப் பெறப்பட்டு மான்யம் நியைவேறியது.

## மரண அறிவித்தல்

**ஜி. எஸ். அருளம்பலம்**
என்ஜினியர்

சுண்டிக்குளியைச் சேர்ந்த திரு. ஜி. எஸ். அருளம்பலம் (இளைப்பாறிய பொது மராமத்து என்ஜினியர்) 19-3-69ந் திகதி காலமாகிவிட்டார். அன்னுரின் பூதவுடல் 20-3-69ல் அவரது இல்லத்தில் நடைபெற்ற ஆராதனையின் பின்னர் அராலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இத்தகவலை ஏற்கனவே இப்பத்திரிகை மூலம் அறிவிக்க முடியாததையிட்டு அன்னுரின் மனைவியும், பிள்ளைகளும், மருமக்களும் மனம் வருந்துகின்றனர். 1305

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு மார்ச் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org